
www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் ☐ இதழ் 28 ☐ ஓகஸ்ட் ,06 - ஒக்ரோபர் ,06 ☐ ISSN 1474 - 8770 ☐ www.thesamnet.com














## ஐரோப்பியத் தமிழ் இலக்கிய ஒன்றுகூடல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


rasiahlaw@aol.com

Conveyancing

(Residential & Commercial)

Matrimonial

Immigration

Landlord & Tenants

Legal Aid work Undertaken

Tel: 020 8543 4040

Fax: 020 8543 2400

180A Merton High St,

South Wimbledon

London SW19 1AY

RASIAH & CO

SOLICITORS

www.tamilarangam.net

உள்ளே

01 தமிழீழம்!!!
**தேசத்தின் பார்வை**

02 சிறப்புப் பேட்டி: அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
**த ஜெயபாலன்**

09 சஞ்சிகை அறிமுகம் 'மற்றது'
**சுகன்**

10 சந்திப்பு: ரி என் ஏ பா உ ரவிராஜ்
**த ஜெயபாலன்**

15 ஐரோப்பியத் தமிழ் இலக்கிய ஒன்றுகூடல்
**மு நித்தியானந்தன்**

17 தமிழ் தேசியவாதமும் முஸ்லீம்களின் ஆயுதம் நோக்கிய நகர்வும்
**பொன் சிவக்குமார்**

20 கவிதை: இறுதிக் கடவுள்
**சுகன்**

21 தமிழீழம் - சர்வதேச சமூகம் - முஸ்லீம்கள்
**முஹமட் எஸ் ஆர் நிஸ்தார்**

25 தோழர் எச் என் பெர்னான்டோவும் இலங்கை ஆசிரியர் சங்கமும்
**வே சிவராசா**

29 இந்திய அரசின் ஒடுக்குமுறை: சல்வாஜீடும் - சதீஸ்கர்
**தோழர் ச வேலு**

33 சந்திப்பு சென்ற இதழ் தொடர்ச்சி: சோமவன்ச அமரசிங்க

36
**ரங்கன் என் தேவராஜன்**

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# தமிழீழம்!!!
## மக்களுக்கு அதுவொரு தெரிவு புலிகளுக்கு அதுமட்டுமே தீர்வு

இலங்கை அரசு வி.புலிகளின் தலைவர் வே பிரபாகரனிடம் கேட்ட உறுதிமொழி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்பேச்சு வார்த்தை இறுதித் தீர்வு நோக்கி நகரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

"இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தி பரிசீலிப்பதற்கு பல அரசியல் வடிவங்கள் உள்ளன. ஆனால் உண்மையான சமாதானத்தை ஏற்கும் மனப்பான்மை இலங்கை அரசிடமோ வி.புலிகளிடமோ இல்லை" என 'இலங்கையின் சமாதான செயற்பாடுகளின் எதிர்காலம்' என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது இந்நம்பிக்கையீனத்தை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

பேச்சுவார்த்தைக்கு தயார் என்று தெரிவிக்கும் அரசு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வுத்திட்டம் எதையும் கொண்டிருக்க வில்லை. லண்டனில் தமிழ் மக்கள் மத்தியில் கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான திட்டம் எதையும் தான் முன்வைக்க போவதில்லை என்று தெரிவித்தார். தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்தும் 70,000 மக்கள் கொல்லப்பட்ட பின்னும் ஒரு பொறுப்புள்ள அரசு பொறுப்பற்ற வகையில் பதிலளிக்கிறது.

வி.புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் இலங்கையின் இறைமைக்குள் சமஸ்டி அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொள்வதாக ஒஸ்லோவில் கையெழுத்திட்டாலும் மக்களிடம் தமிழத்தை கைவிட்டதாக சொல்வதற்கு தயங்கியே வருகின்றனர். வி.புலிகளைப் பொறுத்த வரை ஒஸ்லோ ஒப்பந்தம் சர்வதேச சமூகத்திற்கு போக்குக் காட்டும் ஒரு ராஜதந்திர நடவடிக்கையே.

தமிழீழத்திற்கு மாற்றான ஒரு தீர்வுக்குச் செல்வது வி. புலிகளுக்கும் அதன் தலைமைக்கும் தற்கொலைக்குச் சமனானது. இன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மீது ஒட்டுமொத்தமான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் வி.புலிகள் தமிழீழம் தவிர்ந்த மாற்றுத் தீர்வுக்குச் செல்வதன் மூலம் பன்மைத்துவ அரசியலில் அதிகாரங்களைப் பகிர நிர்பந்திக்கப்படுவார்கள். அவர்களுடைய அரசியலும் தலைமையும் கேள்விக்கும் விமர்சனங்களுக்கும் உட்படுவதற்கான வாயில்களை அது திறந்து விடும். ஆகவே தரை, கடல் மற்றும் ஆகாய படைப்பிரிவுகளைக் கொண்டிருக்கும் உலகின் செல்வந்த இயக்கமான வி.புலிகளுக்கு தமிழீழம் மட்டுமே தீர்வாக முடியும். மாற்றுத் தீர்வுக்கு இடமில்லை.

அரசினதும் வி.புலிகளினதும் அதிகாரப் போட்டியில் சிக்கியுள்ள தமிழர்கள் சமாதானமாகவும் நிம்மதியாகவும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் வாழ்வதற்கான அரசியல் உறுதிப்பாட்டையே கேட்கின்றனர். அது தமிழீழமாக இருக்கலாம், சமஸ்டியாக இருக்கலாம், மாநில சுயாட்சியாக இருக்கலாம். அவர்கள் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்டால் அந்த அரசியல் உறுதிப்பாட்டை வழங்கும் எத்தீர்வையும் தெரிவு செய்யத் தயாராகவே உள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு லண்டன் வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவர் தங்கியிருந்த பார்க் லேனில் உள்ள ஹில்டன் ஹொட்டலில் 25 செப்ரம்பர் 2006 சந்தித்தோம். மாலைப் பொழுதில் வெள்ளைச் சாறமும் வெள்ளைச் சேட்டும் அணிந்து எளிமையாக காணப்பட்ட அமைச்சர் டக்ளஸ் பல விடயங்களை வெளிப்படையாக நகைச்சுவையுடன் பகிர்ந்து கொண்டார். இடையிடையே ரக்கோடரை நிறுத்தி ஓப் த ரக்கோட்டாகவும் சிலவற்றைப் பகிர்ந்து கொண்டார். ஆனால் அவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகிறோம்.

தன் இளமைக்காலத்தில் மாணவர் போராட்டங்களில் ஈடுபட்ட டக்ளஸ் தேவானந்தா Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) ஈபிஆர்எல்எப் அமைப்பின் அரசியல் பிரிவிலும், இராணுவத் தலைமையையும் ஏற்றிருந்தார். ஈபிஆர்எல்எப் இல் ஏற்பட்ட பிளவுக்குப் பின் 1986ல் Eelam People's Democratic Party (EPDP) ஈபிடிபி அமைப்பை உருவாக்கி இன்றுவரை வழிநடத்தி வருகிறார். 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு கடந்த 10 ஆண்டுகளாக அமைச்சராக உள்ளார்.

ஜனநாயக அரசியலில் ஈடுபட்ட போதும் ஈபிடிபி உறுப்பினர்கள் வெவ்வேறு காரணங்களுக்காக ஆயுதம் தாங்கி செயற்பட்டு வருகின்றனர். ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த: இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் டக்ளஸ் தேவானந்தா. பல கொலை முயற்சிகளில் இருந்தும் தப்பிய டக்ளஸ் தேவானந்தாவின் அரசியலை வாசகர்களுக்காக போஸ்மோட்டம் செய்கிறோம்.

*தேசம்: உங்கள் இந்தப் பயணத்தின் நோக்கம் என்ன ?*

அமைச்சர் டக்ளஸ்: கியூபா வந்தது, கியூபா வந்து என்னோட கனவு நாடு மாதிரி. பிடல் கஸ்ரோ அவற்ற தாடி தான் எங்களையும் தாடி வளர்க்க வச்சது. என்ன மாதிரி கியூபாவின் சமூக அமைப்பு இருக்கிறது என்றதை பார்க்க வேணும் என்றதும் மற்றது உலகத் தலைவர்களைச் சந்தித்து இலங்கை நிலைமைகளைச் சொல்றதும் தான் எங்களுடைய நோக்கமாக இருந்தது. அடுத்தது புலம்பெயர்ந்த மக்களை சந்தித்து அவர்களுக்கு நிலைமையை விளக்கி எமது தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவைப் பெறுவது.

## "பிரபாகரனும் நானும் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக வரவேண்டும் என்று தான் விரும்பினோம்."

*தேசம்: நீங்கள் அரசியல் நீரோட்டத்திற்கு வந்து நீண்ட காலமாகிறது. யூஎன்பி, எஸ்எல்எப்பி, ஜேவிபி என பெரும்பான்மை இனக் கட்சிகளுடன் இணைந்து அரசியல் நடத்திய அனுபவம் இருக்கிறது. இக்கட்சிகள் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டு வருவார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா ?*

அமைச்சர் டக்ளஸ்: ஆயுதப் போராட்டத் திற்குப் பிறகு ஜனநாயக நிரோட்டத்திற்கு வந்து கிட்டத்தட்ட 16 வருசம் என்று நினைக்கிறன். 87இல் கிட்டத்தட்ட அதை நோக்கி காலடி எடுத்து வைச்சிட்டன். எங்கள அந்த வரலாறு, சூழ்நிலை தான் ஆயுதம் தூக்க நிர்ப்பந்தித்தது. அதே வாலாறு, சூழல் ஜனநாயக வழிமுறைகளுக் கூடாக இந்த பிரச்சனைகளைத் தீர்க்கலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நேர்காணல்

என்ற நம்பிக்கையை எங்களுக்கு ஏற்படுத்தி இருந்தது. அந்த வழியில நாங்கள் போய்க் கொண்டிருக்கிறம்.

நான் இப்ப அரசு தீர்க்கும் என்ற நம்பிக்கையை விட அந்த சூழலை உருவாக்க வேணும் என்றதில தான் நம்பிக்கை வைச்சிருக்கிறன்.

இலங்கை அரசாங்கமும் சரி இந்திய அரசாங்கமும் சரி அவையள் தங்களின்ர நலன்கள்ள இருந்து கொண்டுதான் பிரச்சினையைப் பார்ப்பினம். நாங்கள் தான் எங்கட பிரச்சினையை சரியாக முன் வைக்க வேண்டும். ‘இருக்கிறவன் சரியா இருந்தா சிரைக்கிறவன் சரியா சிரைப்பான்’ என்று சொல்றது தானே. இதுவரை தமிழ் மக்கள் தரப்பில, பிரதிநிதித்துவப்படுத்துறவை அந்தப் பிரச்சினையை சரியா அணுகேல்ல. சரியா அணுகேக்க அது கைகூடும் என்று நான் நம்புறன்.

*தேசம்: இலங்கை - இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டு அடுத்த ஆண்டுடன் ௨௦ வருடங்கள் ஆகின்றது. இப்போது அதனை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கின்றீர்கள். நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள இந்த முயற்சிக்கு புலிகளை கடுமையாக விமர்சிக்கும் த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரி அவர்களே கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். ௨௦ ஆண்டுகால இத்தனை இழப்புகளிற்கும் பின் மக்கள் இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்று எப்படி நம்புகிறீர்கள் ?*

அமைச்சர் டக்ளஸ்: இன்றைக்கு இந்த ஆயுதப் போராட்டம் ஒரு வன்முறையாக மாறி நாங்கள் என்ன நோக்கத்திற்காக போராட வெளிக்கிட்டோமோ அதை அடைய முடியாதது மாத்திரமல்ல இருக்கிறதையும் இழந்துகொண்டு போறதுக்கான நிலைமையை உருவாக்கி இருக்கு. ஒன்று நாங்கள் முதல் அனுபவித்த அந்த உரிமைகளை தொடர்ந்து அனுபவிக்கிறதில உள்ள தடைகள், சங்கடங்கள் மற்றது பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலைமை, பொருளாதாரப் பின்னடைவு, கல்விப் பின்னடைவு, பொதுவான அபிவிருத்திகளில் பின்னடைவு, சமூக கலாச்சாரச் சீரழிவு,... என்று கன பிரச்சினைகள் உருவாகியிருக்கு. இதை உடன தடுத்து நிறுத்த வேணும். இருக்கிறதை பாதுகாக்க வேண்டி இருக்கு. அதில் இருந்து முன்னேற வேண்டியிருக்கு.

அதனால் தான் மூன்று கட்டத்தில நடைமுறைச் சாத்தியமான தீர்வை முன் வைத்திருக்கு. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால முன் வைக்கப்பட்டிருக்கிற மாகாண சபை முறையை நாங்கள் வட கிழக்கில செயற்படுத்தி பார்க்கேல்ல. மற்றது எல்லாராலயும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கு. தென்னிலங்கையில் இன்றைக்கு அது நடைமுறையிலிருக்கு. எதுவும் நகர முடியாமல் முடங்கிப் போய் இருக்கேக்க இதை நாங்கள் ஆரம்பிக்கிறது, முன்நோக்கி நகர்றதுக்கு ஒரு வாய்ப்பு. அந்த வகையில முதற்கட்டமாக நாங்கள் அதை செயற்படுத்தலாம் என்று நம்புறம். அதுக்கு யாரும் தடையாய் இருக்க முடியாது.

*தேசம்: வி.புலிகளைப் பொறுத்த வரை தமிழீழத்திற்கு மாற்றாக எந்த தீர்வையும் ஏற்றுக் கொள்வது தற்கொலைக்குச் சமமானது. அப்படி இருக்கையில் வி. புலிகளைத் தவிர்த்து இதனை எப்படி அமுல்படுத்த முடியும் ?*

அமைச்சர் டக்ளஸ்: நான் இதில மூன்றாவது கட்டத்தில தான் வி.புலிகளை கருத்தில எடுக்கிறேன். இன்றைக்கு இருக்கிற சூழல் புலிகளுக்கு இருக்கக் கூடிய சர்வதேசரீதியான, தேசியரீதியான அணுகுமுறை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த சூழலைத் தொடரும். நான் சொல்கிற முதல் இரண்டு கட்டமும் நிறைவேற்றப்படுமாக இருந்தால் மூன்றாம் கட்டம் இலகுவாக ஒரு இறுதித் தீர்வை நோக்கி நகரலாம் என்று நான் நினைக்கிறன்.

பிரபாகரனுக்குள்ள உண்மையான பிரச்சினை அவருக்கு ஒரு ஜனநாயக சூழலுக்குள்ள physicalலாவோ politicalலாவோ survive பண்ண முடியாது. தான் மாத்திரம் ஆளக் கூடிய துண்டு நிலம் தான் பிராபாகரனுடைய இலக்கு. அதனால அதில இருந்து வெளிவர முடியாது.

நான் இப்பவும் கூட பழைய ஈரோஸ் உறுப்பினர் களோட கதைச்ச இடத்தில அவையள் மாற்றம் தெரியுது என்று சொல்லிச்சினம். மாற்றம் எதில வெளிப்பட வேணும்? பேச்சுவார்த்தை என்று அறிவிக்க முதல் ஒரு கிழமைக்கு முன் காரசாரமாக தங்கடை வன்முறையை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றெல்லாம் சொல்லிப் போட்டு அடி அகோரமா விழேக்க டப்பென்று மாறி இல்லை இல்லை நாங்க பேசத் தயார் என்று சொல்லினம். பேசத் தயார் என்று சொல்லிப் போட்டு எங்கட ஒரு ஐந்து பேர் பேப்பர் போடப் போன இடத்தில வவுனியாவில சுட்டிருக்கிறாங்கள். அங்கால ஆயுதக் கப்பல கொண்டருகீனம்.

அப்ப என்னால நம்பமுடியாது, பிரபாகரன், புலித் தலைமை வந்து இதில இருந்து விடு பட்டு வர முடியும் என்று. நானும் அதே அனுபவங்களுக்கு உள்ளால் வந்தனான் என்ற படியால் அதை என்னால இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். ஆரம்பத்தில இருந்து சொல்லிக் கொண்டு வாறன் பிரபாகரனால் வரமுடியாது.

தமிழ் மக்களுடைய நலனை முன்நிறுத்தி பிரபாகரன் இந்தப் பிரச்சினையை பேசத் தயாராக இருந்தால், முன்வருவதாக இருந்தால் நான் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன். போட்டியரசை நடத்த நான் விரும்பேல்ல. என்னுடைய அந்த Commitmentதான் நான் தொடர்ந்து இதில இருக்கிறதுக்கு காரணம். அதாவது இந்த மக்களுடைய கஸ்டங்களுக்கு நாங்களும் ஒரு வகையில காரணம். ஆனபடியினால் கடல்ல தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்கள குறைந்த பட்சம் கரையிலயேனும் கொண்டுவந்து விடவேணும் என்ற நோக்கத்தோடுதான் ஈபிடிபி ஆரம்பிக்கப்பட்டதேயொழிய பத்தோடு பதினொன்றாக இருக்கிற நோக்கமில்ல. அதால தான் இந்தளவுக்கு உறுதியாக அல்லது தெளிவாக நான் இருக்கிறன்.

> இந்த மக்களுடைய கஸ்டங்களுக்கு நாங்களும் ஏதோ ஒரு வகையில காரணம். ஆனபடியினால் கடல்ல தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்கள குறைந்த பட்சம் கரையிலயேனும் கொண்டுவந்து விடவேணும்

இதில பிரபாகரன் இதை ஏற்றுக்கொள்ள வேணும் என்றதில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு எந்தளவுக்கு பயனுள்ளதாக இருக்கும். தமிழ் பேசும் மக்களைப் பற்றித் தான் எனக்கு அக்கறை.

அப்ப இந்த மூன்றாம் கட்டத்தில புலி விரும்பியோ விரும்பாமலோ வந்து தான் ஆக வேண்டும். 1994 பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட போது புலித் தலைமை என்ன சொல்லிச்சுது? தங்களுக்கு பாராளுமன்ற ஜன நாயகத்தில நம்பிக்கையில்ல. அதுக்குள்ளால பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. யுத்தம் தான் ஒரே ஒரு வழியென்று. மக்களை மிரட்டி மக்களை பகிஸ்கரிக்க வைச்சினம். அதுக்கு மேலதிகமாக சொல்லிச்சு யாராவது போட்டிபோட்டால் துரோகி களாக கருதப்பட்டு கொல்லப்படுவினம் என்று.

ஆன 10 வருசத்தால 2004ல் புலிகளாகவே பாராளுமன்றத்துக்கு ஆக்கள அனுப்பிச்சினம். கள்ளவோட்டு போட்டு. ரிஎன்ஏ என்று தெரியும் தானே. ரிஎன்ஏ என்றா என்ன? Tiger Nominated Agent தான் சரியான word. 2006ல உள்ளுராட்சி சபைத் தேர்தலில என்ன செய்தினம் ஓடி ஓடி nomination குடுத்தாங்கள். அதில புதுக்குடியிருப்பு பிரபாகரன்ர குடியிருப்பு. அது நம்மட கட்டுப் பாட்டுக்கு வந்திருக்கு.

இன்றைக்கு பிரபாகரன் deep sea fishஆ இருக்கி றார். நாளைக்கு அவரை shallow water fishக்கு கொண்டு வரலாம். கொண்டு வந்தா தெரியும். எங்க போயினம் வருகினம் என்று பாக்கலாம். law and order பிரச்சினையாத் தான் வரும்.

சில பேர் சொல்லுகினம் புலிய அழிச்ச பிறகு தான் தீர்வு என்று நான் அதை நம்பேல்ல. நான் பாக்கிறன் என்ன என்டா ஒரு அசுத்தக் காற்ற அப்புறப்படுத்திற அதே நேரத்தில ஒரு தூய்மையான காற்று அந்த இடத்தை நிரப்ப வேணும் என்றது தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*தேசம்: இந்தியா இன்றும் முன்னால் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளுக்கு பாதுகாப்பளித்து வருகிறது. இப்போது த.வி.கூ தலைவர் ஆனந்தசங்கரிக்கு அகிம்சைக்கான விருது வழங்கப்பட்டதிலும் இந்தியாவின் பின்னணி உள்ளதாக நம்பப்படுகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் இந்தியா வரவழைத்து பேசியுள்ளது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதில் தமிழ் தலைமைகளுக்கிடையே போட்டி உள்ளமை வெளிப்படையானது. இந்நிலையில் உங்களுக்கும் இந்தியாவுக்குமான உறவுகள் எப்படி உள்ளது ?*

அமைச்சர் டக்ளஸ்: சுமூகமாக இருக்கு. ஆனந்தசங்கரிக்கு விருது வழங்கப்பட்டதில இந்தியாவின்ர say இருந்திருக்கலாம். அதுல உண்மையிருக்கலாம். ஆனா ரிஎன்ஏ, அவை தான் நேரம் கேட்டு, சொல்லிக் கொண்டிருந்தவை அந்தா சந்திக்கிறம் இந்தா சந்திக்கிறம் ...... என்று. இந்தியா அழைக்கேல்ல.

*தேசம்: கேள்வி மாகாணசபை ?*

அமைச்சர் டக்ளஸ்: இந்தியா விரும்பும். இந்தியா ஏற்றுக் கொள்ளும் என்று நம்பிறன். நான் இந்தியாவுடன் இதைப் பற்றி கதைச்சிருக்கிறன் அவர்கள் அதுக்கு சாதகமாக பதில் தந்திருக்கினம். அங்க இங்க எல்லாம் போறியள் ஏற்கனவே ராஜீவ் காந்தியும் ஜேஆர் ஜெயவர்த்தனாவும் sign பண்ணிய அந்த ஒப்பந்தத்தில இருக்கிறதையே அமுல்படுத்துங்க. மாகாண சபையிலேயே தொடங்குங்க என்று ரணில் விக்கிரமசிங்கவிடம் சொல்லியிருக்கினம். அது பேப்பர்லயும் வந்திருக்கு.

*தேசம்: வரதராஜப்பெருமாள், ஆனந்தசங்கரி போன்றோரை முதன்மைப்படுத்தி முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்ற நோக்கம் ஏதும் இந்தியாவுக்கு இருக்குமா ?*

அமைச்சர் டக்ளஸ்: இல்ல. ஏன் அந்த நோக்கம் இருக்க வேணும். மக்களால யார் தெரிவு செய்யப்படுகினமோ அவையள் தான்.

*தேசம்: தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திய தலைவர்களில் நீங்களும் ஒருவர். அதற்காக பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை நீங்கள் அணி திரட்டி இருந்தீர்கள். ஆனால் இன்று அந்தப் பாதையை விலத்தி வெகுதூரம் வந்துள்ளீர்கள். நீங்கள் அன்று சென்ற பாதை தவறானதா அல்லது இன்று வழியில்லாமல் போய்க் கொண்டிருக்கிறீர்களா ?*

அமைச்சர் டக்ளஸ்: அன்றைக்கு அந்த தேவை இருந்தது. இதில நான் மாத்திரம் இல்ல. நீங்கள், இவர் எல்லாரும் தான் அதுல நடந்தது. நீங்கள் இன்றைக்கும் அந்த தேவை இருக்கென்று யோசிக்கிறீங்களோ தெரியாது.

*தேசம்: அந்த தேவை இருக்கிறதாகவே பார்க்கிறோம்.*

அமைச்சர் டக்ளஸ்: அன்றைக்கு அந்த தேவை இருந்தது. நாங்கள் ஆயுதம் தூக்கிப் போராடுற நேரத்தில தென்னிலங்கையில புரட்சிகரமான சக்தி வருமாக இருந்தால் அந்த புரட்சிகரமான சக்தியோட இணைந்து ஐக்கிய இலங்கைக்காகப் போராடுற நிலைமையில தான் நாங்க இருந்தம். ஆனா இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகு மீண்டும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு வாழலாம். அதற்கூடாக இந்த பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று நம்பிற படியால்தான் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறைக்குள்ளே வந்தது. அடுத்த 15, 16 வருடத்துக்குள் அந்த நம்பிக்கை மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டிருக்கிறது.

*தேசம்: சமகாலத்தில் நீங்களும் பிரபாகரனும் இன்னும் பலரும் தமிழீழ விடுதலைக்காக ஆயுதம் தூக்கினீர்கள். இன்று அவ்வாறான பலர் எம்மத்தியில் இல்லை. இன்று நீங்கள் பல கொலை முயற்சிகளில் இருந்து தப்பி வி.புலிகளின் ஹிட் லிஸ்டில் உள்ள ஒருவர். வி.புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிய உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?*

அமைச்சர் டக்ளஸ்: பிரபாகரனால் ஒருபோதும் ஜனநாயக வழிமுறைக்கு வரமுடியாது. வன்முறைக்கூடாக, கொலைகளுக்கூடாகத் தான் தன்னை நிலை நிறுத்தலாம். வன்முறை தேவையில்லை என்று நான் சொல்ல வரவில்லை. வன்முறைக்கு ஒரு தேவை இருக்கிறது. அதற்கு ஒரு வரையறை இருக்க வேணும். இதெல்லாம் அத்து மீறப் போகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாங்கள் ஆயுதம் தூக்கியது சிங்களவன் எங்களைக் கொல்றான், எங்கட உரிமையளை மறுக்கிறான், அதுல இருந்து பாதுகாக்கிறதுக்கும் உரிமைகளை பெறுறதற்கும் தானே. இன்றைக்கு நாங்களே எங்கட உரிமைகளை மறுக்கிறது அவங்கள நாங்களே கொல்ற நிலைமைக்குத் தான் தள்ளப்பட்டிருக்கு இந்த போராட்டம்.

ஒரு கட்டத்தில எங்களுக்கு நல்ல வாய்ப்புகள் எல்லாம் இருந்தது. இயக்கங்களுக் கிடையில் இணக்கமற்ற நிலைமை ஒருதரை ஒருதர் கொல்றது, அடிக்கிறது, அடக்கிறது அதுகள் தான் எங்களை ஒன்றுமில்லாமல் பண்ணியது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையாவது வடிவாய் பயன்படுத்தி நாங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருக்கலாம்.

ஒரு தடவை எனக்கு ஞாபகமிருக்கிறது, நம்மட அத்தியடி officeல தான் இந்தியப்படை வரபோகுது நாங்கள் என்ன செய்யப் போகிறம் எண்டதைப் பற்றி ஒரு கலந்துரையாடல். அதில நான் ரமேஸ் தோழர் ஆக்கள் இருந்தம். அங்கால கிட்டு, திலீபன். இங்கால ஈரோஸ். அப்ப இப்படி கதைக்கேக்க ரெலோ இந்தியப் படையை கொண்டு வரப்போகுது எண்டது தானே கதை.

புலி சொல்லிச்சு எதிர்க்க வேணும் என்று. நாங்கள் ஈரோஸ் எல்லாம் ஒரே அபிப்பிராயம் தானே. அப்ப நான் சொன்னது ஒரு பேரலையை எதிர்த்தா நாங்கள் முடக்கிக் கரையில வீசப் படுவம். அலை தாக்காம அலைக்குள்ள போறது தெரியும் தானே அப்படி பொது வேலைத் திட்டத்திற்குக் கீழ அதை பயன்படுத்திக் கொள்ளுவோம் என்று.

கிட்டர் சொன்னார் நாங்க அங்க பயிற்சி எடுத்தனாங்க உங்களுக்கு இந்தியப் படையைப் பற்றித்தெரியாது. இந்தியப்படை ஒரு diciplineஆன force. அப்ப இந்தியப் படையைப் பற்றி அப்படி ஒரு அபிப்பிராயம் இருக்குமெண்டா, அந்த கால கட்டத்தில ஒரு பேப்பிள் கலரில தமிழீழ மக்கள் என்று ஒரு போஸ்ரர் ஒட்டியிருந்தது புலி. அதேன் போஸ்ரர் ஒட்டிறியள் இந்தியப் படைவந்தால் கற்பழிக்கும், கொலை செய்யும், கொள்ளையடிக்கும் என்றெல்லாம். அதுக்கு உடன திலீபன் சொன்னது, இல்ல இல்ல மக்கள மிரட்டாட்டா மக்கள் படைகளோட சேர்திடுவினம் என்று.

பிரபாகரன் இன்றைக்கு நேற்றல்ல ஆரம்பகட்டம் தொட்டே அவற்ற இது என்னவென்றால் புலிகள் படைகளைத் தாக்கினால் படைகள் மக்களைத் தாக்கும். மக்கள் தங்களுக்கு ஆதரவு தருவினம் என்றது.

இதில பிரபாகரன் நினைச்சார் ரணில் விக்கிரமசிங்க வந்தால் சமஸ்டியை முன்வைத்து, நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச அழுத்தத்தை கொண்டு வரப்பாப்பார். ராஜபக்ச வந்தால் ஜேவிபி, ஜேஎச்யு இன்ர பின்னணியோட ஒரு தீவிரவாதப் போக்கு எடுப்பார் என்று சொல்லி. பிரபாகரனும் டக்ளஸ் தேவானந்தாவும் மகிந்த ராஜபக்ச வரவேண்டும் என்றுதான் விரும்பினது. ஆனா காரணங்கள் வேற. அணுகின முறை வேற. பிரபாகரன் எதிர்க்கிறதுக் கூடாக வரவச்சது. நான் ஆதரிக்கிறதுக் கூடாக வர வச்சது.

பிரபாகரனைப் பற்றி எனக்கு அனுபவத்திற் கூடாக ஒரு கணிப்பு இருக்கு. அவரால ஒரு ஜனநாயக வழிமுறைக்கு வர முடியாது. அவரே அவரைக் கொல்லுவார் என்றது தான் என்ர கணிப்பு. கிட்லருக்கு வர முடியேல்ல. பொல்போட்டுக்கு வரமுடியேல்ல. முசோலினி, அப்படியான ஒரு character தான் பிரபாகரன்.

*தேசம்: நீங்கள் தினம், தினம் துப்பாக்கிகளுடனும் குண்டுகளுடனும் போராடி வாழ்ந்து கொண்டிருக் கிறீர்கள். உங்கள் கடைசி ஆசை என்னவென்று அறியலாமா ?*

அமைச்சர் டக்ளஸ்: நான் அப்படி ஒன்றும் யோசிக்கேல்ல. உயிரைப் பற்றி ஒரு பயம் இருக்குமா இருந்தால் நான் இன்றைக்கு உங்களோட இதில இருந்து கதைத்திருக்கப் போறதில்லை. அப்படி எனக்கு பயம் இருந்திருந்தால் வெளிநாட்டில assylum எடுத்திருக்கலாம். வாழ்க்கையில மயிர் நரைக்கிற மாதிரி ஒரு விசயம் தான் இது. நாளைக்கு என்னை தற்கொலை செய்யிறதுக்கூடாக பிரச்சனை தீரும் என்றால் நான் அதுக்குத் தயார்.

களுத்துறையில அடிபட்டுப் போகேக்க செத்துப்போறன் என்று எனக்கு விளங்குது. தமிழ் பேசும் மக்கள் வாழ்க என்றது தான் என்ர கோஸமா இருந்தது. கடல்ல அடிபட்டு போகேக்கையும் எனக்கு தெரியுது நான் போப்போறேன் என்று சொல்லி. தெரிஞ்சுகொண்டுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்தியரே சித்தார்த்தன் தோழர் வந்து கேக்க விடிய ஒரு மூன்று நாலுமணி ஒப்பிரேசன் முடிஞ்ச பிறகு, கேட்டதாம் என்ன மாதிரி என்று, தாங்கள் செய்யக் கூடியதெல்லாம் செய்தாச்சு இனி மேல தான், கடவுள் தான், இது பண்ண வேணும் என்று. எனக்கு இதுல நம்பிக்கையில்ல என்றது வேற. ஆனா சொன்னார். வைத்தியருடைய சிகிச்சையும் என்ர மன வைராக்கியமும் தான் என்னைப் பாதுகாத்தது என்று நினைக்கிறன்.

தமிழ் பேசும் மக்களுக்கு, நாட்டுக்கு ஒரு நல்ல எதிர்காலம் வர வேண்டும் என்றது தான் என்ர விருப்பம்.

*தேசம்: நாடு என்றது தமிழ் பேசும் மக்களுக்கான நாடா ?*

அமைச்சர் டக்ளஸ்: ஐக்கிய இலங்கை என்று வந்திட்டம் தானே, பிறகேன் நாங்கள் ஒரு பம்மாத்து தனத்தை அதில கடைப்பிடிக்க வேண்டும்.

***தேசம்:நீண்டகாலம் அமைச்சர் பதவியில் இருந்திருக்கின்றீர்கள். அதனூடாக பல்வேறு வகையிலும் மக்கள் நலனில் கவனமெடுத்திருக்க முடியும். இருந்தும் உங்களால் மக்களின் மனங்களையும் இதயங்களையும் வெல்ல முடியாமல் போனது ஏன் ?***

அமைச்சர் டக்ளஸ்: நீங்கள் தான் அப்படி நினைக்கிறியள். மக்கள் அப்படி நினைக்கேல்லை.

***தேசம்: மக்கள் நினைக்கிறார்களா, இல்லையா என்று உங்களுக்குத் தெரியாதே ?***

அமைச்சர் டக்கிளஸ்: உங்களுக்குத் தெரியாம இருக்கலாம் ஆனால் மக்களோட இருக்கிற எனக்குத் தெரியும் தானே. என்னோட மக்களுக்கு நிரம்பத் தொடர்புகள் இருக்கு. எங்கட மாவட்ட அலுவலகங்கள் இருக்கு தங்கட தேவைக்காக அவர்கள் வருகிறார்கள். நான் யாழ்ப்பாணம் சென்றால் ஒரு நாளைக்கு 300 பேராவது பல தடைகளை மீறிப் பார்க்க வருகிறார்கள். நான் ஒராள் தானே அப்ப ஒரு 150 பேரைத் தான் என்னால பார்க்க முடியும்.

நான் அவைட்ட கேக்கிறது ஒரு ரூபாய்க்கு 10 மாம்பழம் வாங்கலாம் என்டா 22 ரூபாய்க்கு எத்தினை மாம்பழம் வாங்கலாம் என்று. ஒரு எம்பியால இவ்வளவு செய்யலாம் என்டா 22 எம்பியால கனக்க செய்யலாம். அந்த இதை எங்களுக்குத் தர வேண்டும் என்றது தான்.

எனது அனுபவத்தில் இருந்து, நாங்கள் மக்களை வெல்வதாகவே நம்புறன். மற்றது இந்த அமைச்சுப் பதவியை 94இலேயே எடுத்திருக்க வேணும். நான் அந்த கொள்கை பேசி கோட்டை விட்ட மாதிரி, நான் அதைப்பற்றியும் கவலைப்படுறன். அதையிட்டு எனக்கு வருத்தம் இருக்கு.

***தேசம்: இலங்கையில் மனித உரிமைகளை மீறுபவர்களில் ஈபிடிபியினரும் அடங்குவதை சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன. உங்கள் கைகளில் இரத்தக் கறை இருப்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?***

அமைச்சர் டக்ளஸ்: ஈபிடிபி தொடர்பாக சொல்லப்படுறதில 95 வீதம் எந்தவித ஆதாரமும் இல்லாத அரசியல் குற்றச்சாட்டு. சேறு பூசுறது. நீங்கள் சொல்லுறியல் மனித உரிமை அமைப்பால நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று. எங்க நிரூபிக்கப்பட்டு இருக்கிறது? எதைச் சொல்லுறியள்? ஒன்றைச் சொல்லுங்கோ. ஈபிடிபி மீறியிருக்கு என்றா சொல்லுங்கள் அதைப் பற்றி விவாதிப்பம். நீங்கள் எழுந்தமானமாகக் குற்றம்சாட்ட முடியாது.

***தேசம்: பிபிசி ரிப்போட்டர் நிர்மலராஜனின் படுகொலை.***

அமைச்சர் டக்ளஸ்: அது எங்க நிரூபிக்கப்பட்டு இருக்கிறது?

***தேசம்: மனித உரிமை அமைப்புகள் ஈபிடிபி செய்ததாக குற்றம்சாட்டியுள்ளது.***

அமைச்சர் டக்ளஸ்: மனித உரிமை அமைப்பு என்றா எந்த அமைப்புச் சொல்லுது? அது பயஸ்ட்டா சொல்லுது. எனக்கு அதுக்குரிய காரணங்கள் இருக்கு.

***தேசம்: கோப்பாய் அதிபரின் படுகொலை. யாழ் உதயன் அலுவலகத்தில் .....***

அமைச்சர் டக்ளஸ்: டிபிஎஸ் ஜெயராஜ் இருக்கிறார் தானே. இரண்டு சம்பவத்தை நான் சொல்லலாம். ஒன்று எனக்கு வந்து புலிகள் 1995இல அடிக்கேக்க என்ன சொன்னவை, சுடுகோப்பியும் முட்டைக் கொத்தும் சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்க தான் அடிச்சவை என்று. ஆனா அன்றைக்கு முட்டைக் கொத்து இல்ல. நான் சின்னன்ல இருந்தே தேத்தண்ணி, கோப்பி குடிக்கிறேல்ல. அப்ப ஜெயராஜ் தான் பக்கத்தில இருந்து பாத்த மாதிரி எழுதுறார், சுடுகோப்பியும் முட்டைக் கொத்தும் சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்க நடந்தது என்று. அது ஒரு பொய் தானே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்தது தராக்கியை கொண்டது. கருணா வந்து நின்று கேட்டு கேட்டு சுட்டதாம். உண்மையில கருணாவுக்கும் அதுக்கும் சம்பந்தமில்ல. எல்லாருக்கும் தெரியும் யார் சம்பந்தம் என்று. Amnesty Internationalம் இப்படித்தான். தவறுதலா ஈபிடிபியை குற்றம்சாட்டினது என்று Amnesty International ஏற்றுக் கொண்டது. ஆனா அவை மறுத்து அறிக்கை விடமாட்டினம்.

கிட்டடில தினக்குரல்ல எல்லாருக்கும் ஆயுதம் குடுத்திருக்கு என்று போட்டிருக்கு. ஆனா ஈபிடிபிக்கு ஆயுதம் கொடுக்கப்படேல்ல. அது பொய்யான செய்தி. ஒரு கிழமைக்கு முதல் வந்தது. இப்படியான பொய்ச்செய்தியை நாங்க ஜனநாயகம் பேசுறம் என்றதற்காக எழுதிக் கொண்டிருக்க முடியுமா? அப்பதான் ஒதுங்கிறன் பத்திரிகை உலகத்தில் இருந்து என்று சொல்றார். மறுப்பு போடுற என்று, ஈபிடிபி மறுக்குது அதா மறுப்பு. நீ அவன்ர அழுத்தத்திற்கு எழுதுறா, அவன்ர அழுத்தத்திற்கு எல்லாம் செய்து போட்டு ஏன் இப்படியான பொய்ச் செய்தியை போடுவான்.

நான் தவறு விடேல்ல என்றெல்லாம் சொல்ல வரேல்ல. நீங்கள் என்னை convenience பண்ணினால் தவறுவிட்டவன் என்று, நான் அதுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுவன் பரிகாரம் காணுவன். நான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என்று சொல்லப் போறதில்ல.

*தேசம்: உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியான ஊர்காவற்துறையில ரிஎன்ஏ க்கு அடித்தது ?*

அமைச்சர் டக்ளஸ்: யார் அடித்தது? மக்கள். ஏன் மக்கள் அடிக்க முடியாது. மக்களெல்லாம் குண்டு வைக்கினம் என்றால் ஏன் மக்களடிக்க முடியாது.

நான் ஒரு ஐந்து பத்து வீதம் அப்படி நடக்காது என்று சொல்ல வரேல்ல. அறியாத் தனத்தில தெரியாத் தனத்தில தவறுகள் நடக்கலாம். நான் அதை மறுக்க வரேல்ல. சொல்லப்பட்ட குற்றச்சாட்டில 90 வீதத்திற்கு மேல எந்த வித ஆதாரமும் இல்ல, அடிப்படையுமில்ல. பொய்.

*தேசம்: கேணல் கருணா பிரிந்தவுடன் உங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தார். பின் அந்த உறவு சிதைவதற்கு என்ன காரணம் ?*

அமைச்சர் டக்ளஸ்: நான் தான் முதன் முதலாக வெளிப்படையாக ஆதரித்தது. ஜனநாயக வழி முறைக்கு வராத புலியில இருந்து ஒரு பெரும் பகுதியினர் விடுபட்டு வரேக்க, அதை பாதுகாக்கிறதும் ஆதரிக்கிறதும் என்னுடைய ஒரு வரலாற்றுக் கடமை. அரசியல் கடமை என்று நான் நினைச்சபடியால் தான் ஆதரிச்சது.

அதுக்குப் பிறகு அதனுடைய போக்கில எனக்கு இணக்கப்பாடில்லாத படியினால் அப்படியே விடுபட்டுப் போய்ச்சு.

*தேசம்: தற்போது கருணா - பரந்தன் ராஜன் உறவு முறிந்துள்ளது.*

அமைச்சர் டக்ளஸ்: ஓம் பத்திரிகைகளில படித்திருக்கிறன்.

*தேசம்: எதிர்காலத்தில் கருணாவுடன் இணைந்து அரசியலில் ஈடுபடும் எண்ணம் உண்டா ?*

அமைச்சர் டக்கிளஸ்: ஓ, அவையள் ஒரு சரியான திசையில வருவினம் என்றா அதை நான் வரவேற்பன்.

*தேசம்: முன்னர் ஈபிஆர்எல்எப் இல சேர்க்கப்பட்ட 1000 பேர் வரை வரதராஜப்பெருமாள் இந்தியாவில் வைத்துள்ளதாக அறிகிறோம். அவர்களுக்காக நிதியும் சேகரிக்கிறார்கள் என்று அறிகிறோம்.*

அமைச்சர் டக்ளஸ்: ஈபிஆர்எல்எப் என்று செயற்பாடு கொண்டதா அங்க யாரும் இருக்கிற மாதிரி எனக்கு தெரியேல்ல. அதெல்லாம் பொய். அங்க ஆக்கள கொண்டு போய் இவங்கள் எல்லாம் கைய விட்டுட்டு ஓடிட்டாங்கள். அவை கஸ்டப்பட்டுக் கொண்டு தங்கட தங்கட தொழிலோட இருக்கினம். அவைக்கு தொடர்ந்து அரசியல்ல ஈடுபடுற நோக்கம் இல்லை. அப்படி இருந்தாக்கள் எல்லாம் வந்திட்டினம்.

*தேசம்: இறுதியாக புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் என்ன கேட்க விரும்புகிறீர்கள் ?*

அமைச்சர் டக்ளஸ்: இன்றைக்கு இலங்கை உள்ள நிலையில மக்கள் இந்த நீண்ட யுத்தத்தால ரொம்பவும் கஸ்டப்படுகிறார்கள். அவர்கள் யுத்தத்தை விரும்பேல்ல. ஆனா அதைச் சொல்றதுக்கான பேச்சு சுதந்திரமோ எழுத்துச் சுதந்திரமோ அங்கில்லை.

புலம்பெயர்ந்து வாழ்றவர்கள் தான் குரல் கொடுக்க வேண்டும். இன்றைக்கு ஒன்றுமில்லாத நிலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மூன்று கட்டமாக அமுல்படுத்தி ஒரு தீர்வைக் காண முடியும் என்று நான் நம்புறன். இதற்கு புலம் பெயர்ந்து வாழும் நீங்கள் முழு அதரவு தருவதோடு அதை நடைமுறைப்படுத்துவதற்கான சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சஞ்சிகை அறிமுகம்

## மற்றது



**சுகன் (பிரான்ஸ்)**

புகலிடச் சஞ்சிகைகள், பத்திரிகைகளின் நீண்ட வழித்தடத்தில் யாழ் மேலாதிக்கம், யாழ் மையவாதம், யாழ் மனக்கட்டமைப்பு இவற்றைக் கேள்விக்குட்படுத்தியும் எதிர்த்தும் அவ்வப்போது விமர்சனங்கள், ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன.

மாறாக யார் இந்த யாழ்ப்பாணத்தான்(சிவத்தம்பி), யாழ்ப்பாணம், பண்பாடு, கலாச்சாரம், கருத்துநிலை(சிவத்தம்பி), யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக்கொள்ளல் - (சிவத்தம்பி) - இவையும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்திருக்கிறது.

தமிழ்ச்சிந்தனை, தொழில்முறை, அறிவு உற்பத்தி வெளிப்பாடுகளும் யாழ்ப்பாணத்தை நோக்கி குவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண வைபவ மாலையிலிருந்து யாழ்ப்பாணம் மிளகாய்த்தூள், யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை வரை யாழ்ப்பாணச் சிந்தனை பரந்து விரிந்தது. இவை குறித்த கவன ஈர்ப்பாகவும் எதிர்ப்பிதழாகவும் சிறப்பிதழாகவும் வெளிவந்திருக்கிறது 'மற்றது'.

1. தமிழ் இடதுசாரிகளும் யாழ்மையவாதத்தின் சிந்தனையும்: சண்முகலிங்கம்
2. தேவகாந்தனுடன் உரையாடல்: கற்சுறா
3. 'குட்டி' திரைப்படை விமர்சனம்: கற்சுறா
4. 'பு' னாவும் அதன் 'து' னாவும்: ஜீவராசி
5. கே டானியல் கடிதங்கள்: அசுரா நூல் மதிப்புரை
6. பேராசிரியர் சிவத்தம்பியும் நவசிந்தனைகளும்: அ.மார்க்ஸ்
7. no more t(f)ears sister: ஆவணப்படத்தின் மீதான மனோரஞ்சனின் விமர்சனம்
8. யாழ்ப்பாணியம் : நல்ல முகமூடி : ஈழத் தமிழ்த்தேசியம்: கற்சுறா
9. அலெக்ஸான்டிறியா: சக்கரவர்த்தியின் சிறுகதை
10. The Exile Returned - A Self Portrait Of The Tamil Vellahlahs of Jaffna, Srilanka - Ratnajeevan Hool: நூல் மீதான வின்சன்டனின் நூல்அறிமுகம்
11. அனுபவம், பகிர்வு, எதிர்வுறல்: அமீதா
12. மையவாதத்தைக் கோட்பாட்டு ரீதியாக அணுகுதல்: வின்சன்ட்
13. யாழ்ப்பாணத்தின் மானம் காக்கும் கோவணம் அல்ல கிழக்கு மாகாணம் - எம். ஆர். ஸ்ராலின்

என குறிப்பிடத்தக்க ஆக்க வகைகளுடன் வெளிவந்திருக்கிறது மற்றது.

தமிழ்ப் பெருங்கதையாடல், தமிழ்ச்சிந்தனை மரபு, தமிழ்ச்சால்பு இவைகள் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டும் இவற்றின் புனிதங்களும் புனைவுகளும் போட்டுடைக்கப்பட்டும் மாற்றுச் சிந்தனை மரபின் குறிப்பிடத்தக்க வருகை 'மற்றது' சஞ்சிகை. ( matrathu@hotmail.com )

யாழ்ப்பாண மேலாதிக்கம், யாழ் மையவாதம், யாழ்ப்பாண மனக்கட்டமைப்பு இவை பற்றிய மேலதிக வாசிப்பிற்கு பின்வரும் நூல்கள் உங்களுக்கு பயனுள்ளவையாக இருக்கும்.

*யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918) ( மெஸ்.க. வேலுப்பிள்ளை )
*யாழ்ப்பாணக் கல்வெட்டு யாழ்ப்பாணச் சரித்திரம் ( முத்துத்தம்பிப்பிள்ளை )
*பிறிட்டோவின் யாழ்ப்பாண வைபவ மாலை
*யாழ்ப்பாணக் குடும்ப ஐக்கியசபை ( The Jaffna Family Union Geneology And Brief Sketches )
*யாழ்ப்பாண விக்காரியத்து வரலாறு
*Early Settlements In Jaffna ( P. Ragupathy )
*யாழ்ப்பாண வைபவ விமர்சனம் ( ஞானப்பிரகாசர் - 1928 )
*யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு (சி.க.சிற்றம்பலம்)
*யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் ( கா இந்திரபாலா )
*யாழ்ப்பாணத்தில் இந்து சமயம்(வி சிவகாமி)
*யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை ( கா.சிவத்தம்பி )
*யாழ்ப்பாணத்தான் யார் ? ( கா.சிவத்தம்பி ) யாழ்ப்பாண நூல் நிலையம்

*யாதுமூரே யாவருங் கேளீர்*

www.tamilarangam.net

# சந்திப்பு:

# நிம்மதியான சூழலில் நாங்கள் வாழுவோம் என்ற நம்பிக்கை இழந்துவிட்டது

## ரி என் ஏ .. பா உ ரவிராஜ்

*தேசம்: தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மூன்றுமே சில சலுகைகளை தமிழர்களுக்கு பெற்றுத் தந்தனவே அல்லாமல் தமிழர்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்கத் தவறியுள்ளன. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேவை குறிப்பிடத்தக்கதாக இல்லை. இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலம் என்ன?*

ரவிராஜ்: இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக எந்தவித மாற்றத்தையும் தமிழ் மக்களுக்கு கொண்டுவரவில்லை என்ற விடயத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு நீங்கள் எங்களைக் குறை சொல்ல முடியாது. அதற்குரிய முழுப்பொறுப்பையும் இலங்கையில் இருந்த அரசாங்கங்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தந்தை செல்வநாயகம் பங்காளியாக இருந்த ஜி ஜி பொன்னம்பலம் தலைமையிலிருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அன்றிருந்த சிங்கள அரசாங்கங்களுடன் இணைந்து மலையக மக்களுடைய பிரஜாவுரிமையை மறுத்த பொழுது கொள்கையின் அடிப்படையிலே தான் தந்தை செல்வா 1949ல் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். அன்றிலிருந்து அவர் இறக்கும் வரை பலவிதமான அரசியல் வெற்றிகளை பெற்றிருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்ப டவில்லை.

1958 பண்டா - செல்வா ஒப்பந்தம் அவருடைய





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றி. 1965இலே டட்லி - செல்வா ஒப்பந்தம் தந்தை செல்வநாயகத்தினுடைய அரசியல் வெற்றி. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் சமஸ்டி முறை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. வடகிழக்கு இணைப்பு ஒரு மாநிலமாக ஏற்றுக்கெ ாள்ளப்பட்டிருக்கிறது. அவற்றை அமுல்படுத்தாது விட்டது அவருடைய தோல்வி அல்ல சிங்கள அரசாங்கங்களின் தோல்வி.

1965ல் டட்லி செல்வா ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்ட போது பாராளுமன்றத்தில் உரை யாற்றிய தந்தை செல்வநாயகம், "இன்று எங்களைப் போன்ற மிதவாதத் தலைவர்களுடன் நீங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு அதை அமுல்படுத்த முடியாமல் திணறுகிறீர்கள். இன்னும் கொஞ்ச காலத்திலே எங்களுடைய எதிர்காலச் சந்ததியினருடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டி வரும் அது உங்களுக்கு கடினமானதாக இருக்கும்" என்று சொன்னார். அது இன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் தோல்வியை இலங்கை அரசாங்கம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

1976ல் தமிழீழப் பிரகடனத்தை முதல் முதல் செய்தவர் தந்தை செல்வா. அதன் அடிப்படையிலே மக்கள் ஆணையை 1977ல் பெற்றவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்.

தமிழர் தரப்பிலே இப்போது ஒரு ராணுவ பலம் இருக்கிறது. இதை பெற்றுத் தருவதற்கு பல இளைஞர்கள் பல தியாகங்களைச் செய்திருக்கின்றார்கள். பல இயக்கங்கள் எங்களுக்காக போராடி இருக்கிறன. இயக்கங்களுக்கும் இயக்கங்களுக்கும் இடையே முரண்பாடுகள், பலவிதமான பிரச்சினைகள் இருந்தாலும் இன்றுவரை அந்த இறுதி இலக்கிலே நின்று போராடிக் கொண்டிருப்பது தமிழீழ வி.புலிகள். இதை யாரும் மறுக்க முடியாது. இதற்காக மற்ற இயக்கங்களுடைய நடவடிக்கைகளையோ அவர்களுடைய பங்களிப்பையோ கொச்சைப்படுத்தவில்லை. அவர்களுடைய பங்களிப்பையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் எங்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள்.

இன்று எங்களுடைய பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கிறது. இதைத் தொடக்கி வைத்தவர் அண்ணன் அமிர்தலிங்கம் அவர்கள். 1978லே எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவியைப் பாவித்து பலவிதமான பிரச்சாரங்களை பல நாடுகளிலே செய்திருந்தார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எடுங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்களிப்பு இருக்கின்றது. அதை யாரும் மறுக்க முடியாது. ஏன் வடகிழக்கு இணைப்புக்காக அவர்கள் 1982ல் இருந்து இந்தியாவில் இருந்து செயற்பட்டாலும் காத்திரமாக செயற்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்று ஒரு ராணுவ பலம் தமிழ் மக்களிடம் இருக்கின்றது. இதற்காகத் தான் இந்த பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறதேயொழிய எங்களிடம் ஒரு ராணுவ பலம் இல்லாமல் இருந்திருந்தால் எங்களுடைய இனம் முற்றாக அழிந்திருக்கும். மொழி முற்றாக அழிந்திருக்கும்.

என்னைப் பொறுத்தவரையிலே இலங்கை அரசாங்கம் தன்னுடைய ஒற்றையாட்சிக் கொள்கை யை மாற்றி கூட்டாட்சிக் கொள்கை என்ற ரீதியிலே ஒரு அரசியல் தீர்வுக்கு வி.புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடாத்த முன்வராத பட்சத்திலே நாடு பிரிகின்ற சூழ்நிலை ஏற்படும்.

*தேசம்: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உணரப்படு கிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் சுயாதீனம் என்றதன் எல்லை என்ன?*

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நான்கு அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பு. இன்று நாங்கள் தமிழீழ வி.புலிகளுடன் அவர்களுடைய அரசியல் அபிலாசைகளை தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்தமான அரசியல் அபிலாசைகளை ஏற்றுக்கொண்டு செல்கிறோம். தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த அரசியல் அபிலாசைகள் என்று சொல்லும் போது நாங்கள் மிகவும் சுயாதீனமாக இயங்குகிறோம். அதாவது தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் அரசியல் இலக்கை அடைகின்ற விதத்திலே நாங்கள் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் எல்லைகளும் இல்லாமல் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

நீங்கள் கேக்கின்ற கேள்வி எனக்கு நன்றாக புரிகிறது. நன்றாக விளங்குகிறது. அதாவது நாங்கள் தமிழீழ வி.புலிகளுடைய கட்டுப்பாட்டில் இருந்து செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தான் கேட்கிறீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களுக்கு முதலாவது தேவை இறுதியானதும் நியாயமானதும் எமது அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதுமான ஒரு தீர்வு. இத்தீர்வைப் பெற வி.புலிகளுடைய பலம் எங்களுக்குத் தேவை.

இந்த சூழ்நிலையின் அடிப்படையிலே இயங்குகின்ற ஓர் அரசியல் கட்சிக்கு என்ன எல்லை இருக்கின்றது. நாங்கள் நிச்சயமாக தமிழீழ வி.புலிகளுடையபலத்தைஅதிகரிக்கின்றவர்களாக அரசியல் சக்தியை கொடுக்கின்றவர்களாகத் தான் இருக்க வேண்டும். அதற்காகத் தான் தமிழ் மக்கள் எங்களுக்கு வாக்களித்து இருக்கிறார்கள்.

எங்களுக்கு உள்ளே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதை நாங்கள் தீர்த்துக் கொள்ளுவோம். பிபிசி நேர்காணலில் உங்களுக்கு தமிழீழம் கிடைத்தால் கூட நீங்கள் அங்கு சுதந்திரமாக சுயாதீனமாக இயங்க முடியுமா என்று என்னிடம் கேட்டார்கள்: நான் அதற்குச் சொன்னேன் அது எங்களுடைய பிரச்சினை. உங்களுடைய பிரச்சினை அல்ல என்று. இலங்கையை கைப்பற்றிய பொழுது மூன்றாக இருந்த இலங்கையை ஒன்றாக்கியவர்கள் நீங்கள். நீங்கள் இலங்கையை விட்டுச் சென்றபொழுது சோல்பரிப் பிரபுவினால் ஆக்கப்பட்ட அரசியலமைப்பிலே இருந்த சிறுபான்மைக்கு பாதுகாப்பாக இருந்த 29வது பிரிவை சிங்களத் தலைவர்கள் நீக்கிய போது நீங்கள் என்ன செய்தீர்கள். ஒப்பந்தங்களை சிங்களத் தலைவர்கள் கிழித்தெறிந்த பொழுது இந்த சர்வதேச சமூகம் என்ன செய்து கொண்டிருந்தது. கை கட்டிக் கொண்டிருந்தது.

தமிழீழ வி.புலிகளுக்கும் எங்களுக்குமிடையே ஆயிரம் பிரச்சினை இருக்கும். இல்லை என்று சொல்லவில்லை. நாங்கள் சகோதரர்கள். அவற்றை நாங்கள் எங்களுக்கு உள்ளே தீர்த்துக் கொள்ளுவோம். ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கும் வகையில் எந்த ஒரு வேறுபாட்டையும் எந்த ஒரு பிரிவினையையும் தமிழ் மக்கள் காட்டமாட்டார்கள். ஒற்றுமையாக ஒரு குரலிலே எங்களுடைய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இது தான் காலத்தின் தேவை. இந்த போராட்டத்திற்கு முடியுமான பங்களிப்பை நாங்கள் செய்ய வேண்டும். செய்ய முடியாதவர்கள் வாய்மூடி இருப்பது மிகுந்த உதவியாக இருக்கும்.

*தேசம்: மகிந்த ராஜபக்ச அரசை ஆட்சிக்கு கொண்டு வந்ததில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முக்கிய பங்குண்டு. அந்த முடிவு தவறானது என்று இன்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?*

**தமிழீழ வி.புலிகளுக்கும் எங்களுக்குமிடையே ஆயிரம் பிரச்சினை இருக்கும். இல்லை என்று சொல்லவில்லை. நாங்கள் சகோதரர்கள். அவற்றை நாங்கள் எங்களுக்கு உள்ளே தீர்த்துக் கொள்ளுவோம்.**

ரவிராஜ்: நிச்சயமாக இல்லை. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வி.புலிகளுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ள மறுத்தது. அது வெளிவரவில்லை. தட்டிக்கழித்தது. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான யோசனைகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், இறுதித் தீர்வு சமஸ்டி அடிப்படையிலே அமைய வேண்டும் இவற்றை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தத்தை செய்வதற்கு வி.புலிகள் கேட்டார்கள்.

அப்போது யூஎன்பி தரப்பில் சொல்லப்பட்ட விடயம் என்னவென்றால் நாங்கள் உங்களுடன் ஒப்பந்தம் செய்தால் நாங்கள் தென்னிலங்கையில் வாக்குகளைப் பெறமுடியாது. அது உண்மை. அந்த வேளையிலே வி.புலிகள் சொன்னார்கள் அப்படியானால் நாங்கள் ரகசியமாக ஒப்பந்தத்தைச் செய்து ஒரு மூன்றாம் தரப்பு நாட்டிடம் அதை ஒப்படைப்போம். தேர்தலிலே நீங்கள் வெற்றி பெற்று இதை அமுல்படுத்த தவறினால் இது வெளியிடப்படும் என்று. இது நியாயமானதொரு கோரிக்கை. இதற்கும் யூஎன்பி சம்மதம் தெரிவிக்கவில்லை.

இத்துடன் நின்றுவிடவில்லை. தேர்தல் காலத்தில் சில கசப்பான உண்மைகளை வெளியிட்டார்கள். மிலிந்த மொறகொட அவர்களும் நளின் திசநாயக்க அவர்களும். (வி. புலிகளில் இருந்து கருணா பிரிந்த பொழுது கருணாவுக்கு யூஎன்பி புகழிடம் அளித்தது.) ஆகவே இப்படி கபடத்தனமான அரசியலை நடத்திய யூஎன்பி இனருக்கு நாங்கள் வாக்களித்து வெல்ல வைப்பதில் என்ன இருக்கிறது.

*தேசம்: அப்படியானால் நீங்கள் மகிந்த ராஜபக்ச வர வேண்டும் என்று விரும்பினீர்களா?*

ரவிராஜ்: அப்படியில்லை. எங்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுத்தவரை இந்த தேர்தலிலே அக்கறைகாட்டத் தேவையில்லை. இன்னுமொன்று இருக்கிறது. மகிந்த வின் உண்மையான நோக்கத்தையும் புடம்போட்டு காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. ஆகவே நாங்கள் இந்த தேர்தலை ஒட்டுமொத்தமாக புறக்கணித்தோம்.



அதை விட்டுவிடுங்கள். சிங்களவர்களுக்கு வேண்டுமென்றால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து இருக்க முடியும் தானே. அவர்கள் அப்படிச் செய்யவில்லையே. எங்களால் தான் அவர் (மகிந்த ராஜபக்ச) வென்றார் என்ற உண்மை இருக்கின்றது. ஆனால் அதற்கு முற்றிலுமான பொறுப்பை சிங்கள மக்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் (சிங்கள மக்கள்) சுதேசவாதிகளுக்கும் யுத்தத்தை விரும்புகின்ற மதவாதிகளுக்கும் தான் வாக்களித்து இருக்கிறார்கள். அதனுடைய விளைவுகளை எல்லோரும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

இதனை உணராமல் மகிந்த ராஜபக்ச நினைக்கிறார் தமிழ் மக்கள் மீது குண்டுளைப் போடுவதன் மூலம் வென்றுவிடலாம் என்று. அந்த வெற்றி அவருக்கு ஒருபோதும் நிம்மதியைத் தரப்போவதல்ல என்பதை அவர் உணர வேண்டும். இனி வருகின்ற யுத்தம் வடகிழக்குக்கு உட்பட்டதாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை.பரந்து பட்ட விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது. இதைத் தாங்குகின்ற சக்தி இலங்கை நாட்டுக்கு இல்லை. இது தான் யதார்த்தம்.

*தேசம்: இந்த நிலை எவ்வளவு காலத்திற்கு தொடரும் என்று நினைக்கிறீர்கள் ?*

ரவிராஜ்: நான் ஒரு அரிசியல் கருத்துக்களைக் கூறக் கூடியவனெ ஒழிய, ராணுவரீதியாகச் சொல்ல முடியாது.

*தேசம்: அரசியல் ரீதியாகவே கூறுங்கள்?*

ரவிராஜ்: உண்மையிலே இந்த விடயத்தில் எதிர்வு கூறமுடியாத ஒரு சூழ்நிலை. ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டும் எனக்கு நம்பிக்கை இழந்துவிட்டது. நிம்மதியான சூழலில் நாங்கள் வாழுவோம் என்ற நம்பிக்கை இழந்துவிட்டது.

*தேசம்: வி.புலிகளை பயங்கரவாத அமைப்பு என்று கூறி பல நாடுகள் தடைசெய்துள்ளன. ஜேவிபி தான் பயங்கரவாத அமைப்புடன் பேச முடியாது மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் தான் பேசுவோம் என்றது. அவ்வாறு இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?*

ரவிராஜ்: நிச்சயமாக நாங்கள் எந்தவிதமான பேச்சுவார்த்தையிலும் கலந்து கொள்ளமாட்டோம். மிகவும் உறுதியாக நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு மக்கள் அளித்த ஆணை என்ன? தமிழ் மக்கள் தங்களது அரசியல் அபிலாசைகளை அடைவதற்கான பேச்சுவார்த்கைளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ வி.புலிகளுடன் மட்டும் பேசி தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறான கபடத்தனமான அரசியல் வஞ்சக சூழ்ச்சி நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஒரு பொழுதும் அடிபணியமாட்டோம். ஒரு பொழுதும் துணை போகமாட்டோம். மாற்று பேச்சுவார்த்தை களுக்குத் துணை போய் எங்களுடைய இனத்தை விற்று விடுகின்ற நடவடிக்கைகளிலே தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் இறங்காது. அப்படி இறங்கினால் எங்களுடைய மக்களுக்கு நாங்கள் செய்கிற ஒட்டு மொத்தமான வஞ்சகமாக அது அமைந்து விடும். பேச்சு வார்த்தை என்றால் தமிழீழ வி.புலிகளுடன் மட்டும் தான்.

பயங்கரவாதத்தைப் பற்றிக் கதைப்பதற்கு தோழர் விமல் வீரவன்சவுக்கு எள்ளளவும் அருகதை யில்லை. அவரும் ஒரு பயங்கரவாதியாக இருந்தவர். இன்று அரசியல் நீரோட்டத்திற்கு வந்துள்ளார். அவருடைய கையிலே இரத்தக் கறை இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் கையில் இரத்தக்கறை இல்லை. இரத்தம் சிந்தி இருக்கிறது. சிந்திக்கொண்டிருக்கிறது. நான் அந்தக் கட்சியில் இருந்து வந்தவன்.

*தேசம்: இந்தியாவுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்புக் குழு விஜயம் செய்யதுள்ளது. இந்தன் நோக்கம் என்ன?*

ரவிராஜ்: தற்போது சில தமிழக அரசியல் தலைவர்க ளின் முயற்சியாலும் நாங்கள் எமது செயற்பாடுகளை முடுக்கிவிட்டதாலும் இந்தியத் தலைவர்களையும் தமிழகத் தலைவர்களையும் சந்திப்பதற்கான சில சந்தர்ப்பங்கள் கிடைத்து. தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய கட்சித் தலைவர்கள் தமிழகத்திலே இருக்கின்றார்கள். அணிசேரா மாநாட்டுக்கு கியூபா சென்றிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியப் பிரதமர் நாடு திரும்பியதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடனான் சந்திப்பு இடம்பெறலாம் என நினைக்கிறேன்.

இதன் முக்கிய நோக்கம் தமிழர்களுடைய பிரச்சினையைப்பொறுத்தவரையிலே,இந்தியாவி னுடைய பங்களிப்பும் அனுசரணையும் அந்தக் காலம் தொடக்கமே இருந்து வந்திருக்கிறது. இந்த உறவுகளை தொடர்ச்சியாகப் பேணுவதும், எங்கள் தரப்பு நியாயங்களை வெளிக்கொண்டு வந்து ஒரு நியாயமான தீர்வுக்காக இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து இந்த சந்திப்பு நடைபெற இருக்கிறது.

*தேசம்: இந்தியா ஏற்கனவே இலங்கையுடன் ஒரு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டு உள்ளது. மீண்டும் நீங்கள் இந்தியாவை அணுகினாலும் இந்தியா அந்த முன்னைய ஒப்பந்தத்திற்கே அழுத்தம் கொடுக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது:*

ரவிராஜ்: இல்லை. இலங்கை அரசாங்கம் மீண்டும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்தும்முயற்சியைமேற்கொண்டுஉள்ளது. இதற்கு இந்திய அரசாங்கம் தனது மறுப்பைத் தெரிவித்து உள்ளது. ஏனென்றால் இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான படிக்கல். முதற் கட்டம். இறுதியான தீர்வாக அது இருக்கவில்லை. அது 13வது திருத்தம் - ஒற்றையாட்சிக்குள் உருவாக்கப்பட்ட தீர்வு. ஆகவே அந்தத் தீர்வு ஒரு சமஸ்டித் தீர்வாக அமையமாட்டாது. அந்த அடிப்படையிலே இந்திய அரசாங்கம் சமஸ்டி முறையிலான தீர்வை கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுக்கும் படி இலங்கை அரசாங்கத்தை கோரி இருப்பதாக எங்களுக்குத் தெரியவருகிறது.

*தேசம்: இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்களுக்கு மேலாக அதிகாரங்களுடைய அரசியல் கட்டமைப்பு இலங்கையில் உருவாக இந்தியா அனுமதிக்கும் என்று நம்புகிறீர்களா?*

ரவிராஜ்: இந்தியாவைப் பொறுத்தவரை இந்தியாவுக்கு இருக்கக் கூடிய முக்கிய பிரச்சினை அங்கிருக்கக் கூடிய தமிழ் மக்கள், தமிழ்நாடு. ஆகவே தமிழ் மக்களது அபிலாசைகளை முற்றிலுமாக புறக்கணித்து இந்தியாவால் நடக்க முடியாத ஒரு சூழ்நிலை அவர்களுக்கு இருக்கிறது.

சமஸ்டி என்று கூறுகின்ற போது ஒவ்வொரு நாட்டிற்கும் அந்த நாட்டினது தன்மைக்கு ஏற்ற விதத்திலே தான் சமஸ்டி முறைகள் இருக்கின்றது. ஆகவே இந்த சமஸ்டி முறைதான் பொருந்தும் இது பொருந்தாது என்று இந்தியா சொல்ல முடியாது.

ராஜீவ்காந்தியின் படுகொலையை வி.புலிகள் ஒரு துன்பியல் வரலாறாக கூறியிருக்கிறார்கள். கடந்த காலத்திலே இந்தியா எவ்வளவுதான் எங்களுடன் பகைமை பாராட்டினாலும் வெறுத்து ஒதுக்கினாலும் எங்களுடைய மக்கள் பாகிஸ்தானிடம் சென்று உதவி கேட்கப் போவதில்லை. சீனாவிடம் சென்று உதவி கேட்கப் போவதில்லை.

ஆனால் என்ன நடக்கிறது. இந்தியாவிடம் உதவி கேட்டுச் சென்றார்கள். இந்தியா ராணுவ உதவிகளை மறுத்ததும் பாகிஸ்தானிடம் மகிந்த ராஜபக்ச ஓடிச் சென்று உதவி பெற்று குண்டு மழை பொழிகிறார். ஆனால் தமிழ் மக்கள் ஒரு போதும் இந்தத் துரோகத்தை இந்தியாவுக்குச் செய்யமாட்டார்கள். இதை இந்தியா நன்கு அறிய வேண்டும். அறிந்திருக்கிறது. இன்னுமொன்றை யும் அவர்கள் (இந்தியா) கற்றுக்கொள்ள வேண்டும். சாக்குப் போக்கான சமரசங்களைச் செய்து அதை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாத சூழ்நிலையிலே மீண்டும் செல்லுமேயானால் அதை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

*தேசம்: இலங்கையில் படுகொலைகள் மிக மோசமாக இடம்பெறுகின்றன. அதில் வி.புலிகளுக்கும் பங்கு உள்ளது என சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஆதாரத்துடன் தெரிவிக்கின்றன. மேலும் சிறார்களை இராணுவ நோக்கங்களுக்கு பயன்படுத்துவது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இவை பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது ஏன்?*

ரவிராஜ்: எங்களுடைய பங்களிப்பு ஒன்றுமே இருக்க முடியாது. கண்டனங்களை நாங்கள் தெரிவித்திருந்தாலும், எங்களையே பதம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், எங்களுடைய ஜோசப் பரராஜசிங்கம் அண்ணன் அண்மையிலே பதம்பார்க்கப்பட்டார். எங்கள் ஜெயானந்த மூர்த்திக்கு குண்டு வீச்சு நடந்தது. என்ன பாதுகாப்பு? ஆகவே இந்த விடயத்திலே எங்களால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. ☑

**நேர்முகம்: த ஜெயபாலன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சத்தியதாஸ் - லக்ஸ்மி



அசுரா - தேவதாசன்

# ஐரோப்பியத் தமிழ் இலக்கிய ஒன்றுகூடல்

ஐரோப்பியத் தமிழர்களின் 33வது இலக்கியச் சந்திப்பு செப்ரம்பர் 23, 24இல் ஸ்ரட்போடில் உள்ள கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. ஆண்டுக்கு இருமுறை கூட்டப்படும் இந்நிகழ்வில் தாயகத்தில் இருந்தும் பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், நோர்வே, டென்மார்க், கனடா ஆகிய நாடுகளில் இருந்தும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். ராஜேஸ் பாலாவின் வரவேற்புரையுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. கிழக்கு லண்டன் பல்கலைக்கழக துணை வேந்தர் மைக் தோர்ண், கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த ஜாஸ்பிர் பானேசேர், நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் ஆகியோர் ஆரம்ப உரைகளை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகிலிருந்து உயிர்நீத்த சி. புஸ்பராஜா, முல்லை யூரான் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. சி புஸ்பராஜா பற்றி லக்ஸ்மியும் (உயிர்நிழல்), முல்லையூரான் பற்றி சத்தியதாசும்(இனி) நினைவு வழங்கினர்.

கி.ல.ப பிரதிநிதி, கவுன்சிலர் போல், ராஜேஸ்பாலா



அடுத்து வழங்கப்பட்ட தலைப்புகளில் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப் பட்டது. 'புகலிட இலக்கியம்: மௌனத்தின் குரல்' - ப. சந்தூஸ்குமார் (பேர்லின்), 'புகலிடத்தில் தலித் இலக்கியம்' - அ. தேவதாசன் (பிரான்ஸ்), நாதன் (பிரான்ஸ்), 'கலாச்சாரத்தளத்தில் பெண்களின் போராட்டம்' - சுமதி ராஜசிங்கம் (இலங்கை), சுல்பிகா (இலங்கை), 'புகலிடவாழ்வில் இளம் தலைமுறையினரின் அடையாளம்' - ம. அருள்நேசன் (நோர்வே) ஆகியோர் முதல்நாள் ஆய்வுரைகளை வழங்கினர். ஒவ்வொரு ஆய்வுரைக் குப் பின்னும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மறுநாள் நிகழ்வுகள் வி. சிவலிங்கத்தின் உரையுடன் ஆரம்பமாகியது. 'மனித உரிமையும் ஈழத் தமிழ்ப் படைப்புக்களும்' என்ற தலைப்பில் மு. நித்தியானந்தனும் 'ஈழத்தமிழ் இலக்கியமும் முஸ்லிம் படைப்பாளிகளும்' என்ற தலைப்பில் மஹ்ருவ் பௌசரும் (இலங்கை) ஆய்வுரைகளை வழங்கினர்.

காரசாரமான விவாதங்களின் பின் இரு நாள் நிகழ்வின் இறுதியிலும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றது. முதல்நாள் நிகழ்வில் பாரதி தமிழ் பள்ளி மாணவிகள் ஆசிரியர்களின் கலைநிகழ்வும் மறுநாள் இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்ட நாடகமும் பாடல்களும் இடம்பெற்றது.

அடுத்த இலக்கிய சந்திப்பு பேர்லினில் இடம்பெறவுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

**மு. நித்தியானந்தன்**



ஐரோப்பாவின் புலம்பெயர்ந்த தமிழர்களின் கலாச்சாரத் தளத்தில் இலக்கியச் சந்திப்பு தீர்க்கமான பங்கினை வகித்திருக்கிறது. ஜேர்மனியில் வெளியாகும் தமிழ் சஞ்சிகைகளின் ஆக்கங்கள் குறித்த விமர்சனக் களமாகவே இலக்கியச் சந்திப்பு தோற்றம் கண்டது. விமர்சன சுதந்திரமும் திறந்த விவாதப் போக்கும் இலக்கியச் சந்திப்பின் அடிநாதமாக அமைந்தன. அரசியலின், இலக்கியத்தின் ஏக போக கருத்தாடல்களின் சட்டாம் பித்தனங்களுக்கு இலக்கிய சந்திப்பு பெரும் சவாலாகவே விளங்கியது. ஆதிகார தர்பார்களின் அகங்காரங்களும் ஆணவ முனைப்புகளும் இலக்கிய சந்திப்பினை வெற்றி கொள்ள முடிந்ததில்லை. மாற்றுக் கருத்துக்களை திறந்த மனதோடு கௌரவித்து விவாதிக்கும் உயர் பண்பின் தளமாக இலக்கியச் சந்திப்பு செயற்பட்டு வந்துள்ளது. ஜனநாயக மரபுகளைப் பேணியும் தனிமனித சுதந்திரங்களைக் கௌரவித்தும் கருத்து சுதந்திரத்தை வலியுறுத்தியும். இலக்கிய சந்திப்பு அதன் சகல நிகழ்வுகளிலும் செயல்பட்டுள்ளது.

புகலிட இலக்கியம் குறித்த காத்திரமான கருத்துப் பரிமாறல்களின் பட்டறையாக இலக்கிய சந்திப்புகள் கோலம் கொண்டிருந்தன. பெண்ணியம், எதிர்ப்பு இலக்கியம், மலையக மக்கள், முஸ்லிம்களின் தேசியப் பிரச்சனை போன்ற அம்சங்களிலும் இலக்கிய சந்திப்பு தனது கவனத்தை விஸ்தரித்து வந்திருக்கிறது. புகலிடங்களில் வெளியாகும் நூல்களும் ஆக்கங்களும் இலக்கியச் சந்திப்பின் முதன்மை அக்கறைக்குரியனவாக திகழ்ந்திருக்கின்றன.

அரசியலிலும் இலக்கியத்திலும் முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட செயற்பாட்டாளர்களின் பயிலரங்காக இலக்கிய சந்திப்பு தன்னை வரித்துக்கொண்டது.

விசாக் கெடுபிடிகளும் பயண ஆவணங்கள் இல்லாத நிலையிலும்கூட எல்லை கடந்து இந்த இலக்கியச் சந்திப்புக்களில் ஆர்வலர்கள் துணிச்சலோடு வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இலக்கியச் சந்திப்பு இறுக கட்டமைக்கப்பட்ட அமைப்பு அல்ல. மத்திய குழுக்களும் கிளைகளும் கொண்ட ஸ்தாபனமும் அல்ல. யாப்பின் பாதையில் சென்ற பயணமும் இல்லை.

இலக்கியச் சந்திப்பினை வெறும் பேச்சுக் கடையாக விமர்சித்தவர்கள் உண்டு. இதனை பூரண அரசியல் இயக்கமாக மாற்றிவிட வேண்டும் என்று அவசரப்பட்டவர்கள் உண்டு. ஒரு அரசியல் கட்சியின் செயற்பாடுகளை பட்டியல் இட்டு அதனை ஏன் இலக்கியச் சந்திப்பு செயற்படுத்தவில்லை என்று கேள்வி எழுப்பி சந்தோசப்பட்டுக் கொண்டவர்கள் உண்டு. கூடிச் சந்தித்து, பேசிக் கதைத்து சாதித்தது என்ன என்ற தராசுப் படிக்கல்லோடு வந்தவர்கள் உண்டு. இலக்கியச் சந்திப்பின் மீது விசமத்தனமான பரப்புரை மேற்கொண்டு தங்களின் காழ்ப்புணர்வுகளை கக்கியவர்கள் உண்டு. ஏகபோக அதிகார மையங்களின் எதிர்ப்புக் கணைகளை இலக் கியச் சந்திப்பு தொடர்ச்சியாக சந்தித்திருக்கிறது.

பல்வேறு விமர்சனங்கள், எதிர்ப்புகள் பழிப்புரைகள், பரப்புரைகள் அனைத்தையும் மேவி ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், நெதர்லாந்து, இங்கிலாந்து, டென்மார்க், கனடா ஆகிய நாடுகளில் இதுவரை 32 இலக்கிய சந்திப்புகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தமை புகலிட இலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்கதாகும். 1988 ம் ஆண்டு ஜேர்மனியில் ஹேர்ண் நகரில் ஆரம்பமான இலக்கிய சந்திப்பு 18 ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்து வந்திருக்கிறது. இலக்கிய சந்திப்பின் இந்த நீண்ட பயணத்தில் சபாலிங்கம், உமாகாந்தன், கலைச் செல்வன், சி. புஸ்பராஜா போன்ற இலக்கிய ஆளுமைகளின் கம்பீரமான பணியினை இலக்கிய சந்திப்பு நினைவு கூர்கிறது.

கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் மனிதாபிமானிகளின் சங்கமமாக இலக்கிய சந்திப்பு செயற்பட்டு வந்திருப்பதே அதன் மிகப் பெரும் பலமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் தேசிய வாதமும் முஸ்லீம்களின் ஆயுதம் நோக்கும் நகர்வும்

'முஸ்லீம்மக்களும்பொதுஇணக்கப்பட்டிற்கான வேலைத்திட்டமும்' தலைப்பிலான கலந்துரையாடல் ராகவன் தலைமையில் சவுத் றைசிலிப்பில் ஒக்ரோபர் 1ல் இடம்பெற்றது. மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு அங்கு உரையாற்றினார்.

## ராகவன் தனது தலைமை உரையில்:

சிங்கள தேசியவாதத்திற்கு எதிராக தமிழ் தேசியவாதம் உருவானது. அது மொழி (தமிழ்) அடிப்படையில் முஸ்லீம்களை தன்னுள் இழுக்க முயற்சித்தது. ஆனால் தமிழ் தேசியவாதத்திற்குள் முஸ்லீம்களை பொருத்த முடியாததால் தமிழ் தேசியவாதம் அவர்களை வெளியேற்றியது. ஒரு சில முஸ்லீம்கள் தவறுவிட்டு இருந்தாலும் முஸ்லீம் சமூகத்தை ஒட்டு மொத்தமாகத் தண்டிப்பது தமிழ் குறும் தேசியவாதப் போக்கே. வி.புலிகள் உட்பட பல்வேறு அமைப்புகளும் முஸ்லீம் மக்கள் மீதான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். ஆனாலும் முஸ்லீம்கள் தமக்குள் எழும் இனரீதியான தேசியவாதத்தை கேள்விக்குட்படுத்த வேண்டும். தேசியவாதம் தன்னுள்ளும் களையெடுப்பை மேற்கொள்ளும். இஸ்லாமிய தேசியவாதம் இஸ்லாமியர்களுக்கே எதிராகச் செல்லும் நிலையை அது தோற்றுவிக்கலாம்.

## சபா நாவலன்:

தமிழ் தேசியவாதம் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடியது அதனால் நான் தமிழ் தேசியவாதத்தை ஆதரிக்கிறேன். ஆனால் குறும் தேசியவாதத்தை எதிர்க்கிறேன். நாட்டின் பொருளாதார வளர்ச்சியினூடாக ஒரு கட்டத்தில் தேசிய அடையாளங்கள் இல்லாமல் போகும். பிரான்ஸில் ஏழு தேசிய இனங்கள் இருந்தது. இன்று அதற்கான அடையாளங்கள் மங்கி விட்டது.

## நிர்மலா:

குறும் தேசியவாதம் என்பதல்ல தேசியவாதம் என்பதே குறுகியது தான். அது பிழையானது. பொருளாதார வளர்ச்சி தேசிய இன அடையாளங்களை இல்லாமல் செய்யும் என்ற கருத்துக்கு எதிரான பல கருத்தியல்கள் தற்போது வந்துள்ளது.



ராகவன் - பௌசர்

## பௌசர் தனது பிரதம உரையில்:

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை வடக்கு கிழக்குடன் தொடர்புபட்ட 3 அம்சங்களைக் கொண்டது. வடக்கு - கிழக்கு பிராந்தியப் பிரச்சினை, தமிழ் - முஸ்லீம் இனத்துவ முரண்பாடு, ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான போக்கு. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது. இதை பேசாமல் விடுவதோ பேசுபவர்களை அழித்தொழிப்பதோ தீர்வல்ல.

தனி மத அடையாளம் மட்டுமல்ல சமூக, பொருளாதார, மத அடையாளங்கள் இணைந்தது தான் முஸ்லீம் அடையாளம். எண்பதுக்கள் வரை முஸ்லீம்கள் மொழி காரணமாக தமிழ்பேசும் மக்களாகவே அடையாளம் கண்டனர். ஆனால் 1985க்குப் பின் தமிழ் பேசும்மக்கள் என்ற கருத்து நிலை காலாவதியாகிவிட்டது. சிங்களத் தேசியம் எவ்வாறு தமிழர்களை ஒடுக்கியதோ அதே போல் தமிழ் தேசியம் இன்று முஸ்லீம்களை ஒடுக்குகிறது. தமிழ் எங்கள் மொழி. இணை பிரியாதது. ஆனால் நாங்கள் வேறு இனம். ஆனாலும் ஒருங்கிணைப்புக்கான சூழலை சாதகமாக பார்க்க வேண்டும்.

தமிழீழம் முஸ்லீம்களுக்கு ஒரு தீர்வாகாது. இது முஸ்லீம் மக்களை அழித்தொழிக்கவே வழி வகுக்கும். மக்கள் தமிழ் முஸ்லீம் வேறுபாடுகளை வெறுக்கின்றனர். ஆனால் வி.புலிகளின் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் நிலைமையை மோசமாக்கி உள்ளது. வி.புலிகளின் வன்முறைகளை முஸ்லீம்கள் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தின் மீதும் சுமத்த முடியாது.

கிழக்கில் வி.புலிகள் உருவாகும் முன்னரேயே தமிழ் - முஸ்லீம் முரண்பாடுகள் அங்குள்ள வளங்கள் தொடர்பாக இருந்தது. உதாரணமாக கிழக்கில் 28 வீதமான முஸ்லீம்கள் 8 வீதமான நிலத்தையே கொண்டிருக்கின்றனர். முஸ்லீம்களின் பயிர் செய்யும் நிலங்கள் தமிழ் பகுதிகளில் இருந்தது. அவர்கள் வரி செலுத்த வேண்டி இருந்தது. இதனை அரசியலாக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மோசமான வன்முறைக்கு புலிகள் இட்டுச் சென்றனர். எண்பதுக்களில் தமிழ் இளைஞர்கள் இருந்த நிலையில் இன்று முஸ்லீம் இளைஞர்கள் உள்ளனர். ஆயுதம் ஏந்த முயல்கின்றனர்.

வடக்கு கிழக்கில் வி.புலிகளை ஏகபிரதிநிதி களாக ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டுமானால் முஸ்லீம்களுக்கு தனிஅலகு ஏற்படுத்தப்பட வேண்டும் என் முஸ்லீம் காங்கிரஸ் தெரிவிக்கிறது. ஆனால் அதிலிருந்து பிரிந்த அத்தாவுல்லா பிரிவு வி.புலிகளில் இருந்து பிரிந்து சென்ற கருணா அணியுடன் இணைந்து வடக்கு கிழக்கு இணைப்பை மறுக்கின்றனர்.

ஆகவே வடக்கு கிழக்கு பன்முகத்தன்மை கொண்ட பிராந்தியமாக பார்க்கப்பட வேண்டும். உடன்பாடான விடயங்களில் இருந்து முரண் பாடுகளை களைய முயற்சிக்க வேண்டும். இதற்கு தடையாக உள்ளது தமிழ் ஊடகங்கள். மனிதத்துவத் திற்கான ஜனநாயக சூழலுக்காக அனைவரும் இணைந்து வேலை செய்ய வேண்டும்.

## நீதிராஜா:

முஸ்லீம்களின் அரசியல் செயற்பாடுகளும் தமிழ் தேசியவாதத்தை தூண்டக் காரணமாக உள்ளது. முஸ்லீம்கள் வி.புலிகளின் வன்முறையை தமிழர்களினுடையதாக பார்க்கக் கூடாது.

## எஸ் நஸ்சாருதீன்:

நாங்கள் போராடி, இரத்தம் சிந்தி இந்நிலைக்கு வந்திருக்கிறோம் நீங்கள் இப்போது பங்கு கேட்கிறீர்கள் என்று சிலர் சொல்கிறார்கள் இதில் என்ன நியாயம் இருக்கிறது. இந்த யுத்த சூழல் தொடர வேண்டுமா? முஸ்லீம் காங்கிரஸ் உட்பட அரசியல் கட்சிகள் தங்கள் நலனுக்காகவே செயற்படுகின்றன.

## என் உஸாகித்:

முஸ்லீம் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டும் என்று தான் நான் பேசி வந்தேன். 33வது இலக்கியச் சந்திப்பிற்கு வரும்வரை எல்லாத் தமிழர்களும் புலிகள் என்று தான் நினைத்திருந்தேன். அந்தக் கருத்து இப்போது மாறிவிட்டது.

## டொக்டர் பாலா:

தமிழ் சமூகம் உரிமைக்காகப் போராடியது என்பதிலும் பார்க்க சுயகௌரவத்திற்காகப் போராடினார்கள் என்பதே பொருந்தும். சிறி அழிப்பு சாதாரண தமிழ் மக்களுக்கு அவசியமாக இருக்கவில்லையே. மேலும் பழையதை மறக்க முடியாது. ஆராய்ந்து தெளிவு பெற வேண்டும்.

## கவுன்சிலர் போல்:

சமூகத்தின் பாதுகாப்பை எதற்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது. நீதி என்பதே ஒரு வகையில் பழிவாங்குவது போன்றது. ஆகவே கடந்த காலத்திலிருந்து மீள Justice & Reconciliation என்பதே பொருத்தமாக இருக்கும். ஆயுதம் ஏந்துவது தீர்வல்ல. இது கிணறு வெட்ட பூதம் வந்த கதையாகவே இருக்கும்.

## சிவலிங்கம்:

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 25 ஆண்டுகளுக்குப் பின் அராஜகமும் வன்முறையும் தான் மிஞ்சியுள்ளது. ஆயுதம் ஏந்தும் போது அதே நிலையையே எதிர்கொள்ளும் போக்கு காணப்படுகிறது.

## அசோக்:

தற்காப்புக்காக ஊர்காவல் படைக்கும் முஸ்லீம் இளைஞர்களுக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்களால் பாதுகாப்பு கிடைத்ததா? முஸ்லீம்கள் ஆயுதம் ஏந்தும் சூழல் ஏற்பட்டிருந்தால் அதற்கான தெளிவை பெறக்கூடிய சூழல் உள்ளதா? அரசு இதனை எப்படி பயன்படுத்தும் என்ற விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

## நிர்மலா:

சிங்கள பேரினவாதம் ஆரம்பத்திலேயே யார் இலங்கையர் என்பதை வரையறுத்துவிட்டது. தமிழர்களும் முஸ்லீம்களும் ஓரம்கட்டப்பட்டுவிட் டார்கள். விளிம்பு நிலையிலுள்ள தமிழ், முஸ்லீம் மக்கள் குறும் தேசியவாதத்தை பற்றி எழும்பு வார்கள். அது ஆயுதம் ஏந்தும் போது மிகப்பெரும் பலம் சேரும் அதனைத்தான் இன்று நாம் பார்க்கிறோம். தமிழ் தேசியவாதத்தை எதிர்ப்ப வர்கள் முஸ்லீம்களுக்காக குரல் எழுப்பவேண்டும்.

## சபா நாவலன்:

முஸ்லீம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்களுடைய போராட்டம் புரட்சிகரமானதாகவும் இருக்கலாம்.

## அகிலன்:

தமிழ் - முஸ்லீம் உறவை வளர்க்க தமிழ் - சிங்கள உறவு ஏன் பிளவுபட்டது என்பதை பார்க்க வேண்டும். சிங்கள் மனித உரிமைவாதிகள் அரசை விமர்சித்தார்கள். ஆனால் வி.புலிகளின் கொடுமையை வெளிப்படுத்தவில்லை. ஆகவே முஸ்லீம் மக்களுக்கு மத்தியில் உள்ள மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தமிழ் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும். ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Low Cost
# Accomodations in London

## Finchley Rd, Archway, Holloway Rd
## Tube Stations அருகாமையில்

* Flats
* Studios
* Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவிடங்கள் வாடகைக்கு உண்டு.

சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - **Standing Order** மூலம் செலுத்த வேண்டும். **D.S.S** ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**Tel \ Fax : 020 8905 0452**

**Email : tarrin@desilugroup.com**

**Web : www.desilugroup.com**

**Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies**

**Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU**

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பில் பௌசரின் வருகை ஏற்படுத்திய சலசலப்பு. பதிலளிக்கிறார் மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர்

*தேசம்: இலக்கியச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக லண்டன் வந்திருக்கிறீர்கள். உங்கள் விஜயம் எப்படி அமைந்தது ?*

பௌசர்: 33வது இலக்கியச் சந்திப்பில் கலந்து கொளடவதற்காக வந்தேன். என்னைப் பொறுத்த வரையில் இப்பயணம் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதாகவும், முற்போக்கு ஜனநாயக சக்திகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த வாய்ப்பாகவும் அமைந்தது. புலம்பெயர்ந்து வாழ்கின்றவர்களின் வாழ்வு முறையை நேரடியாக பார்க்கக் கூடியதாக இருந்தது.

*தேசம்: இலக்கியச் சந்திப்பு இலக்கியத்திற்கான ஒரு களமாக அமைய வேண்டும் என்று ஒரு சாராரும் அரசியல் இல்லாத இலக்கியம் இல்லை என ஒரு சாராரும் அணி பிரிந்துள்ளனர். இது பற்றிய உங்கள் கருத்து என்ன ?*

பௌசர்: நிச்சியமாக இலக்கியம் என்பது அந்த மொழியினுடைய அந்த மக்களினுடைய வாழ்வைப் பேணுவதாகவும் அவர்களடைய மகிழ்ச்சி துன்பங் களை பகிர்ந்து கொள்ளும் நிகழ்வாகவே உள்ளது. உலக வரலாற்று இலக்கியங்களைப் பொறுத்த வரையிலும் அரசியலையும் இலக்கியத்தையும் பிரித்து பார்க்க முடியாது என்றே நினைக்கின்றேன். 80க்குப் பின்னான ஈழத்து தமிழ் இலக்கியத்தின் பெரும்பகுதி நேரடியான அரசியல் தாக்கத்தின் விளைவாகவே இருத்திருக்கிறது. ஆகவே ஈழத்து தமிழ் இலக்கியச் சந்திப்பில் அரசியல் கலக்கக்கூடாது எனச் சொல்வது அப்படிச் சொல் பவர்களின் வசதிகருதிய கூற்றுத்தான். உண்மை வேறாகவே இருக்கிறது.

*தேசம்: இலக்கியச் சந்திப்பிற்கான உங்கள் வருகை ஐரோப்பிய இலக்கிய வட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்ததே ?*

பௌசர்: எனது அரசியல் கருத்துநிலை இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களை பிரதானப்படுத்தியும் அங்குள்ள ஜனநாயகம் கருத்துரிமை பேச்சுரிமை பன்முகத்தன்மை என்பவற்றை வலியுறத்தவதுமாக உள்ளதால் இந்த நிலைப்பாடுகளுக்கு மாற்றான கருத்துக் கொண்ட வி.புலிகளுடன் எங்களுக்கு நிறையவே தெளிவானதும் உறுதியானதுமான முரண்பாடுகள் உள்ளன.

அதனால் இந்த 33வது இலக்கியச் சந்திப்பில் நான் கலந்த கொள்வதை தடுக்கும் நோக்கில் திட்டமிட்டஒருசிலசக்திகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பொய்யானது என்பதுடன் அவை சோடிக்கப்பட்ட கற்பனையாகவும் இருந்தது.

*தேசம்: இக்குற்றச்சாட்டை உங்கள் மீது சுமத்தியவர் தமிழ் இலக்கிய உலகில் மதிக்கப்டும் உங்களைப் பற்றி மிகவும் அறிந்த, நெருங்கிய நண்பர். இயல் விருது பெற்ற பத்மநாப ஐயர். அவ்வாறான ஒருகுற்றச்சாட்டை அவர் வைக்கக் காரணம் என்ன ?*

பௌசர்: பத்மநாப ஐயர் லண்டனில் இலக்கியச் சேவை செய்வதாகவே நான் இதவரை அறிந்திருந்தேன். இலங்கையிலிருந்து தவறான தகவல்களை, முட்டாள்தனமான தகவல்களை அவருக்கு வழங்குகின்ற புலனாய்வுத்துறையை அவர் வைத்திருப்பதாக நான் நினைக்கவில்லை. ஐயர் இயல்விருதையும் தாண்டி வேறு பல விருதுகளுக்கும் முயற்சிக்கிறார் போல்தெரிகிறது.

*தேசம்: இந்தக்குற்றச்சாட்டு பற்றி நீங்கள் பத்மநாப ஐயருடன் கலந்துரையாடினீர்களா ?*

தொர்பு கொள்ளவில்லை. அதற்கான அவசிய மும் எனக்கில்லை.

*தேசம்: உங்கள் லண்டன் வருகை உங்கள் மீதான குற்றச்சாட்டை நிவர்த்தி செய்ய உதவியதா ?*

பௌசர்: பெருமளவில் நிவர்த்தி செய்திருக்கி றது. ஐயர் போன்றவர்கள் அப்பாவிகள் இல்லை. அபாண்டமான குற்றச்சாட்டை சுமத்துபவர் என்பதைபல நண்பர்கள்என்னிடம்நேரடியாகவே தெரிவித்தார்கள். ஐயர் போன்றவர்கள் இலங்கை யில் உள்ள சூழலை கருத்தில் கொண்டு குற்றச்சாட்டுக்களை வைக்கும் போது மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இந்நேர்காணல் எமது சகோதரப் பத்திரிகையான 'லண்டன் குரல்' க்காக எடுக்கப்பட்டது. முழுமையான நேர்காணலை லண்டன் குரல், குரல் 1ல் (15 ஒக்ரோபர் - 28 ஒக்ரோபர்) பார்க்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்தேசியம் - சர்வதேச சமூகம் - முஸ்லிம்கள்

முஹம்மட் எஸ்.ஆர்.நிஸ்தார்

சுயநிர்ணய உரிமை, தனி நாட்டுக்கான அறிவிப்பு, சர்வதேச அங்கீகாரம், இவை தொடர்பான வி.புலிகளின் வியூகங்கள், கள அரசியல் நிலவரங்கள், சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு என்பன பல்வேறு கோணங்களில் இன்று தமிழ் ஊடகங்களால் ஊகிக்கப்பட்டு வருகின்றன.

தனிநாட்டுக்கான அங்கீகாரம் என்பது சட்டரீதியான விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு அரசியல் நடவடிக்கை. இந்த அடிப்படையிலேயே ஏற்கனவே தனிநாடாக இல்லாத பிரதேசங்கள் தனிநாடாவதும், ஏற்கெனவே தனிநாடாக இருந்தவை அப்படியான தகைமையை இழப்பதும் நிகழ்ந்து வருகின்றன.

1933ம் ஆண்டின் மொண்டேவெடியோ சாசனத்தின் (Montevideo convention) பிரிவு இரண்டின் படி ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேசம், நிரந்தர சனத்தொகை, சுதந்திர அரசாங்கம், ஏனைய சர்வதேச நாடுகளுடன், அல்லது குழுமங்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான வல்லமை (capacity), தனது ஆட்சிப் பிரதேசத்தை முழு முனைப்புடன் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், தனது ஆட்சிப் பிரதேசத்தின் பெருவாரியான நிலப் பரப்பில் தமது அரசின் நிர்வாகம் தொடர்ந்து கொண்டிருப்பதை உறுதிசெய்தல், என்பதை நிரூபிக்கும் ஒரு அரசு நோக்கிய அரசு (De facto) இருக்குமானால் பொதுவாக தனிநாட்டுக்கான அங்கீகாரம் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் வலிமையாகக் காணப்படுகின்றன எனலாம். இதற்காக மாத்திரம் புதிதாக ஒரு பிரதேசத்தை தனிநாடாக அங்கீகரித்துத் தான் ஆகவேண்டும் என்ற சர்வதேச சட்டங்கள் எதுவும் இல்லை.

1992ல் முன்னாள் யூகோஸ்லாவியாவில் சேர்பியரின் பேரினவாதத்தில் நசுக்குண்டு விடுதலை வேண்டி நின்ற குரோஏசியா (Croatia), ஸ்லோவேனியா (Slovenia), பொஸ்னியா - ஹெஸர்கோவினா (Bosnia - Hergegovina) என்பன தனிநாட்டுக்கான அங்கீகாரத்தை எதிர்பார்த்து நின்றபோது மேற்சொன்ன மொண்டேவெடியோ சாசனத்திற்குப் புறம்பாக ஐரோப்பிய ஒன்றியம் (European Union) மேலும் பல தேவைப்பாடுகளை முன்வைத்து தனிநாட்டுக்கான அங்கீகாரத்தைத் தாமதிக்கச் செய்ததைக் குறிப்பிடலாம். புதிய அரசுக்கான அல்லது புதிய நாட்டுக்கான அங்கீகாரத்தைப் போலவே அந்நாட்டின் புதிய அரசாங்கமும் (De jura) புதிய பல நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு உதாரணமாக ஆப்கானிஸ்தானில் முன்னர் இருந்த தலிபான் (Thalaban) ஆட்சியைக் குறிப்பிடலாம். தலிபான் அரசு பாக்கிஸ்தான் உட்பட மூன்று நாடுகளின் அங்கீகாரத்தையே பெற்றிருந்தது. இதற்கான அடிப்படைக் காரணம் ஒரு நாட்டில் அமுலிலிருக்கும் அரசியல் யாப்புக்கு (Constitution) அமைவாக ஒரு அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறுமானால் அதற்கான அங்கீகாரத்தில் பிரச்சினை இருக்காது என்பதோடு, அரசியல் யாப்பிற்குப் புறம்பான முறையில், ஒரு புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுமானால் அந்த அரசாங்கத்துக்கான அங்கீகாரமானது கேள்விக் குறியாகவே இருக்கும். அதுவும் புதிதாக மலர இருக்கும் ஒரு நாட்டில் அது மேலும் சிக்கலை ஏற்படுத்தும்.

11 செப்ரம்பர் 2001 க்குப் பின்னான இன்றைய உலக அரசியல் அரங்கில் வலிந்து தன்னை முதன்மைப்படுத்தும் ஐக்கிய அமெரிக்காவும் அதனைப் பின்பற்றும் ஐக்கிய ராஜ்சியமும் இந்த தனிநாட்டுக்கான அங்கீகாரம் என்பதில் ஒரே அணுகுமுறையையே





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுள்ளன. ஐரோப்பிய நாடுகளும் இதனையே பின்பற்றுகின்றன.

இருந்த போதிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய நாடுகளுக்கான அங்கீகாரமானது,ஐரோப்பிய வாழ்வியல் விழுமியங்களையே பிரதிபலிக்கும். அதாவது, பொதுவான மொன்டேவிடியோ சாசனத்தின் ஏற்பாடுகளுடன் மனித உரிமைகள் விடயத்திலும் ஒரு ஆட்சியின் கீழ் விரும்பியோ விரும்பாமலோ வரவிருக்கும்சிறுபான்மையினரின் கலாச்சார அடையாளங்கள், மத சுதந்திரங்கள், அவற்றுக்கான பாதுகாப்பு, எல்லை நாடுகளுடனான நல்லுறவு என்பவற்றுக்கான உத்தரவாதம் செயலுருவில் கிடைக்கும்வரை தனிநாட்டுக்கான அங்கீகாரம் என்பது கருணை அடிப்படையில் வழங்கப்படமாட்டாது.

அண்மையில் பாலஸ்தீனத்தில் நடைபெற்ற அரசியல் மாற்றங்களை எடுத்துக் கொண்டால் பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் உள்ள ஹமாஸ் இயக்கம், காஸா, மேற்குக்கரை (West Bank) பகுதிகளில் உள்ள பலஸ்தீன நிர்வாகசபைக்கு, ஜனநாயகரீதியிலான வாக்கெடுப்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. 74 சதவீத பிரதிநிதித்துவ வாய்ப்பைப் பெற்றுத் தனது நிர்வாகத்தை அமைத்த போதும், ஐரோப்பிய ஒன்றியத்தின் முதல் அறிவிப்பானது, "பாலஸ்தீனத்துக்கான தொடர்ச்சியான நிதியுதவி ஹமாஸ் நிருவாகத்தின் போக்கிலேயே தங்கியுள்ளது" என்பதேயாகும். அதாவது, ஹமாஸ் நிர்வாகம் இஸ்ரவேலுக்கெதிரான ஆயுத எதிர்ப்பை (ஐரோப்பியரின் பார்வையில் பயங்கரவாதத்தை) கைவிட வேண்டும் என்பதே அந்த அறிவிப்பின் வியாக்கியானமாகும்.

பாலஸ்தீனர்களின் பிரச்சினையும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையும் ஒரு சில பொதுத் தன்மைகளைக் கொண்டிருப்பினும், வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டவையாகும்.

ஒஸ்லோ ஒப்பந்தத்தின்படி இஸ்ரவேல்-பாலஸ்தீனம் என்ற இருநாட்டுத் தீர்மானம் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், யாசீர் அரபாத்தின் பத்தா (Fatha) அரசாங்கம் பாலஸ்தீன நிர்வாக சபையினூடாக காஸா பிரதேசத்தையும், வெஸ்ட் பாங்க் பகுதிகளையும் ஊழலின்றி நிருவகிக்க முடியாது. ஆனால் ஹமாஸ் இயக்கம் எந்தவித அரசியல் அங்கீகாரமும் இன்றி, பயங்கரவாத இயக்கம் என்ற நிலையில் இஸ்ரவேலின் நிரந்தர தாக்குதலுக்கு மத்தியிலும் மக்கள் சேவையில் ஈடுபட்டு மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிக் கட்டில் ஏறியது. ஆனாலும் ஹமாஸின் எதிர்காலமும், பாலஸ்தீனத்தின் எதிர்காலமும் மக்களின் ஜனநாயக முடிவுக்கு அப்பாற்பட்டசக்திகளிடமேஉள்ளதைக்காணலாம். இடைவிட சர்வதேச அரசியல் போக்குக்கு புதியதொரு வரைவிலக்கணம் தேவையில்லை.

தமிழீழப் பிரச்சினையையும் அதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் இந்த அடிப்படையிலேயே நாம் நோக்க வேண்டும். 2002ல் வி.புலிகள் ஒருதலைப்பட்ட சண்டை நிறுத்தத்தை அறிவித்ததிலிருந்து ராஜபக்ச அரசஅதிபராக பதவி ஏற்கும் வரை ஆறுகட்டப் பேச்சுக்கள் நடைபெற்று முடிந்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் வி.புலிகளின் குழு, இதய சுத்தியுடன் கலந்து கொண்டதாகவே அறிவித்தது. தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் அப்படியே நம்பினர்.

ஆனால் வி.புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் (படம்) 27.11.2005ல் நடைபெற்ற மாவீரர் தின விளக்கவுரையில் அப்படியல்ல என்று நிரூபித்துவிட்டார். அவர் தனது உரையில் சிங்கள பேரினவாதிகள் தமிழருக்கு எதையும் எப்போதும் கொடுக்கப் போவதில்லை என்றும், ரணில் விக்கிரமசிங்கஒரு நரிக்குணம்கொண்டவர் என்றும் வெளிநாடுகளின் அழுத்தங்களுக்காகவே பேச்சுவார்த்தைகளில் தாங்கள் கலந்துகொண்டதாகவும் கூறிச் சென்றார். பாலசிங்கத்தின் இந்தப் பகிரங்க அறிவிப்பு எதைக் காட்டுகின்றது? தமிழீழம் என்ற ஒரு தனிநாட்டைத் தவிர தம்மிடம் வேறு திட்டங்களோ அது சம்பந்தமான வேலைத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டங்களோ இல்லை. எங்களின் இதயசுத்தி என்பது காலத்தின் தேவைக்காக நாம் கூறுவது என்றுதான் நாம் கொள்ள வேண்டியுள்ளது.

வி.புலிகளின் ஆதரவு ஊடகங்கள் கூறும் அரசியல்இராஜதந்திரத்திற்கும், பாலசிங்கம் கூறும் ரணிலின் நரித் தந்திரத்திற்கும் இடையில் நாம் புதிய விளக்கங்களைத் தேட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இவைபோக, அரசபடைகளுக்கு எதிரான சண்டைகளில் பெரும்பாலும் வி.புலிகள் வெற்றி அடைந்தனர் என்பதை எவரும் மறுக்க முடியாது. அதற்காக, இராணுவ ரீதியிலான வெற்றி எப்போதும் எல்லாக் கட்டங்களிலும் வி.புலிகளுக்கே உரியது என்ற எடுகோளும் அண்மைய கள நிலவரங்களினால் (மாவிலாறு, சம்பூர்) கேள்விக்கு உட்படுத்தப்பட்டு உள்ளது.

வி.புலிகளின் கணிப்பின்படி இலங்கைத்தீவில் சமபலம்கொண்ட இரண்டு படையணிகள் உள்ளன. ஆகவே சமபலம் கொண்ட இரு படையணிகள் கொரில்லா போர்முறையின் எந்த அம்சங்களும் இன்றி முற்றும் முழுதாக மரபுரீதியிலான (conventional) போர்முனையில் சந்திக்கும்போது வெற்றி தோல்வி யாருக்கு என்பதை இப்போது சொல்லி விட முடியாது.

மேலும் இராணுவரீதியிலான இறுதிவெற்றி இலங்கை அரசுக்கேஎன வைத்துக்கொண்டால்கூட, இலங்கை அரசைப் பொறுத்தவரை இறுதிவெற்றி என்பது வி.புலிகள் முற்றாக இல்லாமல் போவது அல்லது வி.புலிகள் தனித் தமிழீழம் என்ற தாயகக் கோட்பாட்டை கைவிடுவது — தமிழ் மக்கள் மத்தியில் புலிகளுக்கான தேவை இருக்கும் வரை உலகின் பணக்கார கொரில்லா அமைப்பை அவ்வளவு எளிதில் கிள்ளி எறிந்துவிட முடியாது.

இதே போன்றே இராணுவரீதியிலான இறுதி வெற்றி வி.புலிகளுக்குஎன்று வைத்துக்கொண்டால் - வி.புலிகளைப் பொறுத்தவரையில் இறுதி வெற்றி என்பது தமது பகுதிகள் எனத் தங்களால் வரையறுக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இலங்கை அரசபடைகள் முற்றாக வெளியேறலும் அந்த வெற்றிடங்களைத் தாம் நிரப்பிக் கொள்வதும் - அது தமிழீழம் என்றதொரு சுதந்திர தனிநாட்டை உருவாக்கிவிடும் என்ற நியதியும் இல்லை.

இறைமையுள்ள நாட்டின் ஒரு பகுதியில் புரட்சிமூலம் ஒரு நிர்வாகத்தை அல்லது அதை விடவும் மேலே சென்று ஒரு அரசை நிறுவ எந்த ஒரு சக்தி முற்பட்டாலும் அது ஐ.நா. பட்டயத்தின் பிரிவு 2(4)யை மீறும்செயலாகும். அதை முறியடிக்க சர்வதேச சட்டம், இறைமையுள்ள அந்த நாட்டிற்கு அனுமதியளிக்கின்றது.

இது இன்றைய எத்தியோப்பியா-எரித்திரியா நிலைமையைஎமக்குஞாபகமூட்டுகிறது.ஏற்கனவே குறிப்பிட்டது போல் மொண்டேவெடியோ சாசனத்துக்கு அமைவாக ஒரு பிரதேசத்தை முனைப்புடன் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், தொடர்ந்தும் எதிர்காலத்தில் அப்படியே தக்கவைத்தல் என்ற ஏற்பாட்டை பூர்த்திசெய்வதாகவும் அமையாது.

மேலும் புரட்சிகர இயக்கத்திற்கு ஆதரவளித்து ஒரு புதிய அரசை நிறுவ நாடொன்று முனையு மானால் அது வெளிப்படையான சர்வதேச சட்ட மீறலாகும். இந்தக் கட்டத்தில் தான் சர்வதேச சமூகத்தின் நாகரீகத் தன்மையும், தன்நாட்டு நலன் கருதிய செயற்பாடும் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

வங்காளதேசம் உருவாகிய வரலாற்றை நாம் பார்க்கலாம். மேற்கு பாக்கிஸ்தானிடம் இருந்து கிழக்கு பாக்கிஸ்தானைப் பிரிக்க அன்றைய பிரிவினைவாதிகளுக்கு இந்தியா வெளிப்படையாக உதவியது. உடனே வங்காள தேசம் உருவாகியது. பாகிஸ்தான் பெரிய பலமான நாடாக இருப்பது இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக இருந்தது. அதனால் பாகிஸ்தானை பிரிப்பதன் மூலம் அதனை பலவீனமாக்குவது இந்தியாவுக்கு அன்று அவசியமானதாக இருந்தது.

புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் கூறுவது போன்று புத்தாண்டுக்குள் புதிய தேசம், இறுதிச் சந்தர்ப்பம், சர்வதேசங்களின் ஆதரவு நமக்கு என்ற கோசங்களை நாம் அப்படியே உள்வாங்கிக் கொள்ள வேண்டியதில்லை. இது இந்த ஊடகங்கள் விளங்கியோ விளங்காமலோ செய்துவரும் பரப்புரைகள் போன்று அவ்வளவு இலகுவானதுமல்ல.

ஐ.நா. சாசனத்தின் (Charter) பிரிவு 9 (Article) ஒரு தனி அரசின் சட்ட வரம்புகளை வரையறுத்துக் கூறுகின்றது. ஒரு பிரதேசமானது இத்தகைய வரையறைக்குட்பட்டு உள்ளது என்ற காரணத்துக்காக சர்வதேச சமூகம் ஒரு பிரதேசத்தை தனி நாடாக அங்கீகரித்து அதனுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டுமென்பதில்லை. அப்படிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வதைச் சர்வதேச சமூகம் மறுப்பதற்கான சகல உரிமைகளையும் கொண்டுள்ளது.

இதற்குச் சிறந்த உதாரணமாக, தென் ரொடீசியா (இன்றைய பொட்ஸ்வானா)வைக் கூறலாம். ரொடிசியாவின் தென்பகுதி பிரித்தானியாவின் கட்டுப்பாட்டிலுள்ள சுயாட்சி பிரதேசமாக (Autonomus) இருந்து தன்னிச்சையாக 1966இல் சுதந்திரப் பிரகடனம் செய்தது. இப்பிரதேசத்தில் தனிநாட்டுக்கான சகல அம்சங்களும் காணப்பட்டாலும், எந்த ஒரு நாடும் அந்தப் புதிய பிரதேசத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வரவில்லை. ஆகவே தென் ரொடீசியா ஒரு தனிநாடாக எந்தவொரு சர்வதேச நாட்டினாலும் அங்கீகரிக்கப்படவில்லை.

இதே போன்று 1976இல் தென் ஆபிரிக்கா ட்ரன்ஸ்கய் (Transkei) என்ற நிலப்பரப்பை இறைமை கொண்டதொரு தனிநாடாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் ஐ.நா.வின் பொதுச்சபை (General Assembly) ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்தப் பிரதேசத்தின் சுதந்திரம் சட்டரீதியற்றது என்று பிரகடனப்படுத்தியது. அது போலவே சிஸ்கெய் (Ciskei) என்ற நாட்டின் சுதந்திரப் பிரகடனத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபை சர்வதேச சமூகத்திற்கு ஒரு அறிக்கையை விடுத்து அதை ரத்துச் செய்தது.

மேலும் உத்தேச தமிழீழ ஆட்சி அதிகாரத்தின் கீழ் வரவிருக்கும் சிறுபான்மை இனமான இலங்கை சோனகர், சமயத்தால் முஸ்லீம்கள், திருக்கோணமலை தொடக்கம் அம்பாறை வரையுள்ள சிங்களவர்கள் தொடர்பான பிரச்சினையில் வி.புலிகள் சரியான நோக்கில் நடந்துகொள்ளவில்லை என்றே தெரிகின்றது.

உதாரணமாக, 1990இல் 24மணி நேரத்துக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு இலங்கை சோனகர் தொடர்பாக வி.புலிகளிடம் தீர்க்கமான முடிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இங்கு தீர்க்கமான முடிவென்பது இலங்கை சோனகரின் விருப்பத்துடன் ஏற்புடையது.

1990 சம்பவத்திற்கு வி.புலிகளின் சார்பாக பாலசிங்கம் மன்னிப்புக் கோரினாலும், வே.பிரபாகரனிடம் இருந்து அந்த மன்னிப்பு வந்திருக்குமானால் நிலைமை வி.புலிகளுக்குச் சற்று சாதகமாகவே அமைந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும். இத்தகைய செயற்பாடுகளின் விளைவாக, பேரினவாத சிங்களவர்களை எப்படித் தமிழர்கள் பார்க்கின்றனரோ, அதே போக்குத் தான் வி.புலிகள் தொடர்பாக இலங்கைச் சோனகர்களிடமும் காணப்படுகின்றது.

சிங்கள பேரினவாதிகள் இந்த உலகத்திலே தங்களுக்குரிய முதலும் முடிவுமான நாடு இலங்கை தான் அதில் யாருக்கும் பங்கில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது போலவே விடுதலைப் புலிகளின் நடவடிக்கையும் அமைந்துள்ளது. தமிழருக்கான முதலாவது என்றில்லாவிட்டாலும் இறுதியான தனிநாடு தமிழீழம். அதில் யாருக்கும் பங்கில்லை என்ற நிலைப்பாடே அது.

அதாவது, சிங்கள பேரினவாதிகளிடம் இருந்து தமிழினம் எதையும் எப்போதும் பெற்றுவிட முடியாது என்ற பாலசிங்கத்தின் கூற்றினை, வி.புலிகள் இலங்கைச் சோனகர் விடயத்தில் கொண்டுள்ள போக்கு அப்படியே பிரதிபலிப்பதைக் காணலாம். ☑

**Bond Institute**

Biology, Chemistry, Physics, Maths, Computer Science & English

**GCSE & A-Level**

Highly Qualified & Experienced Tutors

One to One and Group Classes

Contact: 0796 990 9784
0780 059 6794
0773 687 1624



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தோழர் எச்.என்.பெர்னாண்டோவும் இலங்கை ஆசிரியர் சங்கமும்

வே. சிவராசா,
முன்னாள் தலைவர்,
இலங்கை ஆசிரியர் சங்கம்,
யாழ் மாவட்டக் கிளை.

இலங்கை அரசு சுவீகரிப்பதற்கு முன்பு பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், மத சார்புப் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் எனப் பல பிரிவுகளாக, பல முகாமையாளர்களின் கீழ் இயங்கி வந்தன. ஆசிரியர்கள் மொழிவாரியாக, இனவாரியாக, தராதர வேறுபாடுகளுக்கமைய, சங்கங்கள் அமைத்துத் தாம் சார்ந்த முகாமையாளர்களுக்கு எதிராகப் போராடி வந்தனர். ஆயினும் 1960 இல் பாடசாலைகளைக் கல்வி அமைச்சு பொறுப் பேற்றதைத் தொடர்ந்து, ஆசிரிய தொழிற் சங்கங்களின் செயற்பாடுகள் திருப்புமுனையிற் செல்ல வேண்டியதாயிற்று.

பாடசாலைகளின் முகாமைத்துவம் கல்வி அமைச்சிற்கு மாற்றப்பட்டதால், முன்பு தனிப்பட்ட முகாமையாளருக்கு எதிராகப் பேராடி வந்த அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் (Secondary Trained Teachers Union) ஆகிய ஆறு ஆசிரிய சங்கங்களுடன், இரு தனியார் பாடசாலை சங்கங்களும் இணைந்து அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் என்ற பலம்பொருந்திய ஆசிரிய தொழிற்சங்க அமைப்பாக மாற்றம் பெற்றது. இக்கால கட்டத்தில் தான் எச்.என். பெர்னாண்டோ தொழிற்சங்க சேவையில் நுழைந்தார்.

தோழர் எச்.என். பெர்னாண்டோ சங்கப் பணியில்ஈடுபட்டமையும் அவர் இலங்கைஆசிரியர் சங்கத்தில் தலைவராகி சங்கத்தை வழிநடத்திச் சென்றமையும் தற்செயலான நிகழ்வல்ல. அவர் பணி ஒருவகையில் வரலாற்றின் தேவையாக இருந்ததெனலாம்.

# ஒரே கூரையின் கீழ் இனங்களை மதங்களைக் கடந்த எழுச்சி

ஆசிரிய தொழிற் சங்கங்கள், அரச இயந்திரத்துக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை உருவாயிற்று. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய தொழிற்சங்கங்கள் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்படலாயிற்று.

இலங்கையில் பலம்பெற்று விளங்கிய ஆசிரிய சங்கத் தலைவர்கள் ஒன்றுகூடி, தமக்குள் கலந்துரையாடல்களை நடாத்தி வந்தனர். இதன் பேறாக ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைக் குழு ஒன்றை 1966இல் தோற்றுவித்தனர். இக்குழு கல்வி தொடர்பாகவும், ஆசிரியர்கள் பணி தொடர்பாகவும், பல கோரிக்கைகளையும் மகஜர்களையும் கல்வி அமைச்சுக்குக் கூட்டாகச் சமர்ப்பித்தும் சந்திப்புகளை மேற்கொண்டும் வந்தது. இதுவே பின்பு இலங்கையின் முக்கிய ஆசிரியர் தொழிற்சங்கங்களான ஜாதிக குரு சங்கமய, தேசிய ஆசிரியர் சங்கம் (NUT), அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை

தோழர் எச். என். பெர்னாண்டோ கணிதத்தில் விசேட பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியர். இவரது தந்தையாரும் கணித ஆசிரியராக, தெற்கின் கல்விமான் எனப் போற்றப்பட்ட பி. டி. எஸ். குலரட்ன அதிபராக விளங்கிய, கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கடமையாற்றியவர். அவர் இடதுசாரி அரசியலில் ஈடுபாடு கொண்டவர். ஆகவே தோழர் எச். என். பெர்னாண்டோ என்றும் இயல்பாகவே முற்போக்குச் சிந்தனையாளராக விளங்கினார். அவர் ஏற்ற ஆசிரியப் பணியினூடாக உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரிய சங்கத்தில் இணைந்து தொழிலாளி வர்க்க நலன்களுக்காகப் போராட முனைந்தார். இச்சங்கத்தின் செயலாளர் பதவியில் அமர்த்தப்பட்டார். அக்காலகட்டத்தில் ஏ. பி. சி. டி. சில்வா தலைவராக இருந்து, போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றார். இருவரும் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனக் கலந்துரையாடல்களில் பங்குபற்றி ஆக்கபூர்வமான போராட்டங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னெடுத்துச் சென்றனர். அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதியாக சம்மேளனச் செயற்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பு அவ்வேளையில் எனக்குக் கிட்டியது. அதுவே தோழர் எச்.என். பெர்னாண்டோவின் பன்முகப்பட்ட பணியைப் புரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கியது.

அப்பொழுது அதிகாரத்திலிருந்த யூ. என். பி. அரசாங்கம் பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்து 'சியவச' என்ற கல்வி நூற்றாண்டு விழாவை மேற்கொண்டது. இப்பணம் 'சியவச சீட்டு' மூலம் ஆசிரியர்களை வற்புறுத்தி மாணவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்டது. இதனை ஆசிரியர் சங்கத்தினர் (N.P.T.A) எதிர்த்தனர். அதனால் விற்பனை இடம்பெறவில்லை. அதன் தலைவர், செயலாளர், பொருளாளரைப் பழிவாங்கும் நோக்குடன் மலைநாட்டுப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அதற்கான எதிர்ப்பு பாராளுமன்றம் வரை ஒலித்தது. இதன் காரணமாக காலப்போக்கில் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டது.

அரசு பாரிய கல்விக் கண்காட்சியைக் கொழும்பில் நடத்தியது. இதன் மூலம் மாணவர் கல்விக்கும் ஆசிரிய தொழிலுக்கும் அரியசேவை ஆற்றுவதாக ஒரு மாயைத் தோற்றத்தைக் கொடுக்க அரசு முற்பட்டது. ஆயினும் உண்மை நிலையோ வேறாக இருந்தது. அக்காலத்தில் தான் அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாகவும், அதிகாரிகளின் கெடுபிடிகள் காரணமாகவும் வகை தொகையின்றி ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுப் பழிவாங்கப்பட்டனர். பாடசாலைகளில் நிலவிய சீரான கற்றல், கற்பித்தல் நிகழ்வு சீர்குலைக்கப்பட்டது. வெளியார் தலையீடுகள் அதிகரித்தன.

ஆசிரியர்களின் உண்மை நிலையை வெளிக்கொணரும் பொருட்டு ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம், 'ஆசிரியர் துயர்' (குரு துக்க) என்ற மூன்று நாள் கண்காட்சியினை ஒழுங்குசெய்து 1969 கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடாத்தியது. புகழ்பெற்ற கல்விமான்களில் ஒருவர் என்ற முறையில் வடக்கிலிருந்து ஹன்டி பேரின்பநாயகம் அழைக்கப்பட்டு இக்கண்காட்சியைத் திறந்து வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இக்கண்காட்சி, கல்விமான்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலங்கை அரசின் கல்விக் கொள்கையின் போலித் தன்மை துலாம்பரப்படுத்தப்பட்டது. இதன் வெற்றிக்காக தோழர் எச். என். பெர்னாண்டோ அயராது உழைத்தார். அவர் சார்ந்த சங்கம் 'தரு துக்க' என்ற (மாணவர் துயர்) என்ற மற்றொரு கண்காட்சியையும் தனித்து நடத்தியது. இக் கண்காட்சிகள் மூலம் வசதி குறைந்த மாணவர்களின் கல்வி நிலை, பாடசாலைகளின் சிர்கேடான பௌதிக நிலை, அரசு காட்டிய பாரபட்சம் என்பன துலாம்பரப்படுத்தப்பட்டன. குறிப்பாக நாட்டின் வருமானத்தில் முக்கிய பங்கினை ஈட்டிக் கொடுத்த தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளின் கல்வி எவ்வாறு புறக்கணிக்கப்பட்டது என்பது புகைப்படக் கண்காட்சியொன்றின் மூலமும் எடுத்துக்காட்டப்பட்டது. சாதி, மத, இன பேதமற்று வர்க்க சிந்தனையுடன் வளர்ச்சி பெற்ற தோழர் எச்.என்.பெர்னாண்டோவின் போக்கை அதில் இனம்காண முடிந்தது.

அக்காலத்தில் ஆசிரிய சமூகத்தின் பெரும் பிரச்சினையாக விளங்கியது இடமாற்றமாகும். அது அவர்களை அச்சத்திற்கு உள்ளாக்கியது என்றால் மிகையாகாது. இதனைச் சீர்படுத்தும் பொறுப்பு, ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்திடம் இருந்தது. பொது இடமாற்றத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பித்த சம்மேளனம் அதனை நாடு தழுவிய முறையில் அமுலாக்கும்படி வேண்டியது. அக்கோரிக்கையை கல்வி அமைச்சு உதாசீனம் செய்தது. 1970இல் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னர் சம்மேளனம் சமர்ப்பித்த இடமாற்றத் திட்டத்தை கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி, கல்வி அமைச்சிலும், பிரதேச கல்வித் திணைக்களங்களிலும், ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய, இடமாற்றச் சபைகளை உருவாக்கித் திட்டத்தினைச் சிறந்த முறையில் அமுலாக்கவும் உடன்பட்டது. இது ஆசிரிய சமூகத்திற்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதம் எனலாம். அவர்களின் பெரும் பிரச்சினை ஒன்றினைத் தீர்க்கக்கூடிய வாய்ப்பு அன்று ஏற்பட்டது. ஆசிரிய சங்கங்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் உருவாக்கி சம்மேளனம் வலுப்பெறவும் ஏதுவாயிற்று.

தோழர் எச்.என்.பெர்னாண்டோ கொழும்பு தெற்கு ஆசிரியர் இடமாற்றுச் சபையில் ஓர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதிநிதியாக அமர்ந்தார். அதில் நானும் அங்கம் வகித்தேன். எறக்குறைய 17,000 ஆசிரியர்களை உள்ளடக்கிய, பல அமைச்சர்களின் தலையீடு, செல்வாக்கிற்கு உட்பட்ட, அதிஉயர் அதிகாரிகளின் மனைவிமார்களும் உறவினர்களும் ஆசிரியர்களாகப் பணியாற்றிய பிரதேச கல்வித் திணைக்களமாக அது விளங்கியது இடமாற்றத் திட்டத்திற்கு புறம்பாக எந்தவொரு இடமாற்றமும் நிகழாத வகையில் உறுதியோடு தோழர் எச்.என். பெர்னாண்டோ அதில் செயற்பட்டார். ஆசிரிய சமூகத்தின் நம்பிக்கைக்கு உரிய தலைவனாக எச். என். பெர்னாண்டோ விளங்கினார். தான் சார்ந்த ஆசிரிய தொழிற் சங்கத்திற்கும் நற்பெயர் ஈட்டினார். இதனைச் சீரணிக்க முடியாத அரசியல்வாதிகளும் கல்வி அதிகாரிகளும் சமூகத்தின் மேற்தட்டு வர்க்கத்தினரும் 1971இல் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியைச் சாட்டாக வைத்து கல்வி அமைச்சிற்கும் பாரிய அழுத்தத்தைக் கொடுத்து பிற்காலத்தில் பிரதேச இடமாற்றச் சபைகளைக் கலைப்பதில் வெற்றி கண்டனர்.

ஏனைய தொழிலாளர்களுடன் இணைந்து போராட்ட உணர்வுமிக்க ஒன்றாக அசிரிய தொழிற்சங்கங்கள் வளர்ந்தால் மட்டுமே, ஆசிரிய சமூகம் மேம்பாடடைய முடியுமென்ற நிலைப்பாட்டில், எச். என். பெர்னாண்டோ உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். எனவே விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் உறுப்புரிமைக்கென மட்டுப்படுத்தப்பட்டு இருந்த ஆசிரியர் சங்கம் தனது பெயரை 'இலங்கை ஆசிரியர் சங்கம்' என மாற்றிக்கொண்டது. ஏனைய தராதரமுடைய ஆசிரியர்களும் அதில் அங்கம் வகிக்கத் தொடங்கினார்கள். குறிப்பாக கல்லூரிகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டிருந்த, பிரபல்யம் பெற்ற N.U.T ஆசிரிய சங்கமும் இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்துகொண்டமை அதன் வலுவைப் பெருக்கியது.

இக் காலகட்டத்தில் விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களினதும், பொதுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களினதும் வேதனத்தில் பெரும் ஏற்றத் தாழ்வு காணப்பட்டது. (அடிப்படைச் சம்பளம் ரூபா 155 - ரூபா 88 என அமைந்தது). தேசிய உணர்வு வளர்ச்சி பெற்ற தேசிய மொழிகளான சிங்களம், தமிழ் போதனா மொழிகளாக ஆக்கப்பட்ட பின்னரும், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மத்தியில் மட்டும், இவ்வேறுபாடு தொடர்ந்து நிலவியது. ஆசிரிய சமூகத்தின் மத்தியில் பெரும் அதிருப்தியையும், வேதனையையும் தோற்றுவித்தது. எனவே ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சமசம்பளக் கோரிக்கையை முதன்மைப்படுத்தி மேலும் சில கோரிக்கைகளை இணைத்து கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்தது. வழமைபோல அமைச்சு அதிகாரிகள் அதனை உதாசீனம் செய்தனர்.

எனவெ 1975 ஜனவரி 31 இல் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தீர்மானித்தனர். வேலை நிறுத்தம் உறுதியாக வெற்றிபெறும் என்பதை இறுதி நேரத்தில் தெரிந்துகொண்ட அரசு, முதல்நாள் இரவு பிரதமரின் வாசஸ்தலமாகிய அலரி மாளிகைக்கு சம்மேளனப் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியது. பிரதமருடன் பொது நிர்வாக அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் பிரசன்னமாகி இருந்தார். இரு அடிப்படைச் சம்பளத்திற்கு இடைப்பட்ட ஒன்றை ஏற்றுக்கொள்வதே உகந்ததென அரசினால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. விசேட பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வேதனம் குறைக்கப்படாது, அனைத்து பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் குறைந்தது அதே வேதனம் வழங்கப்பட வேண்டும் என்பதே இலங்கை ஆசிரிய சங்கத்தின் தீர்மானமாக இருந்தது. எனவே அரசினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை எச். என்.பெர்னாண்டோ ஏற்றுக்கொள்ள மறுத்தார். இலங்கை ஆசிரியர் சங்கம் தனித்து நின்று திட்டமிட்டபடி அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டது. காலப்போக்கில் அவர்கள் கோரிக்கைக்கு அமைய வேதனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தோழர் எச்.என்.பெர்னாண்டோ தொழிற்சங்கத் தலைவராக மட்டுமன்றி அரசியல் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். இலங்கை ஆசிரிய சங்கம் வேறு, எச். என். வாழ்வு வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு, அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

இலங்கை சுதந்திரம் அடைந்துள்ளதாகக் கருதப்பட்ட பொழுதும், ஆட்சி அதிகாரத்திற்கு வந்த மேற்தட்டு வர்க்கத்தினர் நாட்டினை முதலாளித்துவப் பாதையிலேயே இட்டுச் சென்றனர். சமூகப் பிரச்சினைகளும் மேலெழத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மக்கள் சேவையே அப்பன் விநாயகன் சேவை

# சமூகப்பணிகளில் கற்பக விநாயகர் ஆலயம்

£40000 தாயகத்திற்கு அனுப்பி உதவியது. ( கார்ள்டன் ரவல்ஸின் உதவியுடன் )

திருக்கோயிலில் உள்ள குருகுலத்தில் 36 சிறார்களை ஆலயம் பராமரிக்கிறது.

தேர்த்திருவிழாவில் சேரும் நிதி வெண்புறாத் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

மட்டக்களப்பில் £27000 செலவில் முதியோர் இல்லம்

தமிழ் தேசிய விளையாட்டுச் சங்கத்திற்கு £2000 வழங்கப்பட்டது.

முத்தோர் நலன்புரி நிலையம் நடாத்தப்படுகிறது.

இலக்கிய முயற்சிகளுக்கு உதவி வருகிறது.

உங்கள் பங்களிப்பைச் செய்ய விரும்புபவர்கள்
கற்பக விநாயகர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.
2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX

Tel : 020 8527 3819


தொடங்கின. வேலையற்ற படித்த இளைஞர்கள் தொகை அதிகரித்தது. முற்போக்குச் சிந்தனை கொண்ட இளைஞர்கள் மத்தியில் அரச எதிர்ப்பு உணர்வு வலுப்பெறத் தொடங்கியது. இதன்பேறாக எழுபதுகளில் ஜே.வி.பி. இயக்கம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அவ்வியக்கத்தின் தலைவர் றோகண விஜயவீர எச். என். இன் சகோதரியைத் திருமணம் செய்திருந்தார். எச். என். இன் சகோதரன் டாக்டர் பெர்னாண்டோ, இயக்கத்தின் முக்கியத்தர்களில் ஒருவராக விளங்கினார். தோழர் எச். என். பெர்னாண்டோ அவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டுக் குழுவின் தலைவராக இருந்தார். 1971இல் கிளர்ச்சியை அடக்குவதற்கு அரச படைகள் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று குவித்தமை, அரச எதிர்ப்புணர்வை மேலும் வலுப்பெறச் செய்யவும், ஜே.வி.பி. இயக்கத்தை இளைஞர்கள் நாடிச் செல்லவும் மேலும் தூண்டியது. எனவே அக்காலத்தில் ஆசிரியப் பணியை மேற்கொண்ட இளம் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். எழுபதுகளின் இறுதி ஆண்டுகளில் இருபத்தி இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட போராட்டக் குணாம்சம் மிக்க ஒரு தொழிற்சங்கமாக இலங்கை ஆசிரியர் சங்கம் மிளிர்ந்தது. ☑




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய அரசின் ஒடுக்குமுறை சல்வாஜுடும் – சதீஸ்கர்

**தோழர் ச வேலு**




இந்தியாவின் இதயப் பகுதியாக அறியப்படும் சத்தீஸ்கர் (முன்னாள் மத்தியபிரதேசம்)மாநிலத்தில் தற்போதைய பி.ஜே.பி. தலைமையிலான ராமன் சிங் அரசும், எதிர்க் கட்சியான மகேந்திர சர்மா தலைமையிலான காங்கிரஸும் இணைந்து சல்வாஜுடும் என்ற பெயரில் பழங்குடி மக்களின் மீது மிகப்பெரும் தாக்குதலை நடத்தி வருகின்றது. (சல்வா ஜுடும் என்றால் கோண்டு மொழியில் அமைதி முயற்சி என்று குறிக்கப்படும்). 40க்கும் மேற்பட்ட கிராமங்கள் இதனால் அழிக்கப்பட்டுள்ளன. 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு இரையாக்கப்பட்டு உள்ளனர். குழந்தைகள் குற்றுயிரும் குலையுயிருமாய் கொல்லப்படுகின்றனர்.

ஏறத்தாழ 50,000 பழங்குடியினர் முகாம்களில் அகதிகளாக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் மீதான இந்தத் தாக்குதலுக்கு மன்மோகன்சிங்கின் காங்கிரஸ் அரசு துணை இராணுவப்படைகளையும், கொடூர அடக்குமுறை செய்வதில் பெயர்பெற்ற நாகா பட்டாலியன்களையும் நவீன ஹெலிகப்டர்கள், கண்ணிவெடிப் பாதுகாப்பு வாகனங்கள் தானியக்கி கையெறிகுண்டு செலுத்திகளையும் வழங்கி, பழங்குடி மக்களை அழிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் 40,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட பஸ்தார் மாவட்டத்தில் 82சதவிகிதம் பழங்குடி மக்களாவர். 1220 கிராமங்களில் ஏறத்தாழ 700 கிராமங்களில் பள்ளிக்கூடம் கூட இல்லை. பள்ளிக்கூடங்கள் உள்ள இடங்களிலும் அவை ஒழுங்காகச் செயற்படுவதில்லை. நோய், பசி, பட்டினியால் இறப்போரின் எண்ணிக்கை எண்ணிலடங்காது. இப்படி இறப்போரின் விபரங்களும் அபூர்வமாகத் தான் அரச அலுவலகங்களில் பதிவு செய்யப்படுகின்றன.

இந்நிலையை மாற்றி அமைக்க, காடுகளில் வாழும் பழங்குடியின மக்கள் கடந்த 25 ஆண்டுக் காலமாக மாவோயிஸ்ட் கட்சியில் தங்களை இணைத்து அக்கட்சியின் தலைமையின்கீழ் அணிதிரண்டு வருகின்றனர். காட்டு இலாகா மற்றும் அரசு அதிகாரிகளையும் அரசுத் திட்டங்களின் சுரண்டலையும் எதிர்த்துப் பல போராட்டங்களைச் செய்துவருகின்றனர். அவர்களின் சொந்த அதிகாரக் கட்டமைப்புக்களை உருவாக்கி, சமூக முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்குப் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர். விவசாயத்திற்கான நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அழிவிலிருந்து காடுகளைக் காப்பதற்கான வலைப்பின்னல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இது பாரம்பரிய கிராமத் தலைவர்களினதும், ஆதிவாசி நிலப்பிரபுக்களினதும் அதிகாரத்தையும் அப்பிரதேசத்தில் கேள்விக்குறியாக்குகிறது. ஊழல் மிகுந்த கிராம அதிகாரிகள் மற்றும், பஞ்சாயத்து இராச்சியத்தை அது அம்பலப்படுத்தியது.

பழங்குடிகளின் வளர்ந்துவரும் இந்த இயக்கத்தை நசுக்குவதற்காக விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் என்ற பெயரில் முதலாவது அடக்குமுறை இயக்கம் 1991இலும் இரண்டாவது இயக்கம் 1996-97இலும் காங்கிரஸ் அரசினால் தொடுக்கப்பட்டது. மக்களின் கடுமையான எதிர்ப்பினால் அடக்குமுறை தோல்விகண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்போது பி.ஜே.பி. தலைமையிலான ராமன்சிங் அரசு, சல்வாஜுடும் என்ற பெயரில் மூன்றாவது அடக்குமுறையினைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இந்த அடக்குமுறையில் காங்கிரசும் இணைந்து கொண்டுள்ளது.

மாநிலத்தில் சிறப்பு போலீஸ் அதிகாரிகள் (SPO), கம்பளிப் பாதுகாப்புப்படை (Carpet Security Force) என்ற பெயரில் குண்டர்களும், மாநில காவல்படையின் உயர் அதிகாரிகள் தலைமையில் போலீசும், துணை இராணுவப்படைகளும் பழங்குடியினர் மீது அடக்குமுறைகளை ஏவி வருகின்றனர்.

மக்களை மனிதத் தன்மையற்ற சித்திரவதைக்கு இரையாக்குகின்றனர். ஈவு இரக்கமற்ற கொடூரச் செயல்கள் பயத்தை உருவாக்கக்கூடிய அளவிலானவை. சிறுவர்களின் தலை துண்டிக்கப்பட்டு, வீட்டு நிலைகளில் தொங்கவிடப்பட்டன. பெண்கள் கூட்டுப் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

சல்வா ஜுடுமைப்பற்றிக் கண்டித்து பத்திரிகைகளில் செய்திவரக்கூடாது என்பது இந்த அரச மஃபியா கும்பல்களின் எழுதப்படாத சட்டமாகவுள்ளது. இதை மீறும் பத்திரிகையாளர்களைச் சுட்டுத்தள்ள அங்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பழங்குடி மக்கள் கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பு என்ற பெயரில் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டு உள்ளனர். 15,000 முதல் 50,000 மக்கள்வரை கண்டிவாடா, பிஜாபூர், கோண்டா முகாம்களில் அடைக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு உள்ளனர். பழங்குடிகளின் குடியிருப்புகள் அகற்றப்பட்டு பெருமளவு காவல் நிலையங்களும், துணை இராணுவ நிலையங்களும் அங்கு உருவாக்கப்பட்டுள்ளன.

முகாமுக்கு வர மறுப்பவர்களை சித்திரவதைப் படுத்துவதுடன் கிராமங்களை விட்டுவர மறுப்பவர்களை நக்ஸலைட்டுகள் என்ற கூறிக் கொல்வதாகப் பாதிக்கப்பட்டவர் (OutLook 15.5.2006) கூறியுள்ளார்.

முகாம்களில் தென்னைமரக் கீற்றுக்களைத் தவிர கூரையேதும் இல்லை. தண்ணீர் இல்லை. பகிர்வு மையங்களில் நொய் அரிசியையும், காய்ந்துபோன கிழங்குகளையும் தவிர்த்து வேறு உணவு இல்லை. இப்படிப்பட்ட திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பஞ்சத்தில் மக்கள் உணவுப் பொருட்களை முட்டிமோதிப் பெறவேண்டி உள்ளது. இதனால் தொற்றுநோய்களினால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

தண்டிவாடா மாவட்ட ஆட்சியாளர் கே.ஆர். பிஸ்டா OutLook(15.5.2006) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "நீ நக்ஸலைட்டாக இல்லையெனில், நீ சல்வா ஜுடுமாக இருக்கவேண்டும். இங்கு வேறெந்த மூன்றாவது வாய்ப்பும் இல்லை" என்று பேட்டி அளித்துள்ளார்.

கிராமத்திலிருந்து இளைஞர்கள் சல்வாஜுடும் குண்டர்களால் கொண்டு செல்லப்பட்ட பின், சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அவர்கள் இருக்கும் இடம்கூடத் தெரியாமல் போகும் சம்பவங்கள் நடந்து வருகின்றன. கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் கிராமத்துக்குள்ளும் அருகாமையிலும் தூக்கியெறியப்படுகின்றன.

சல்வாஜுடுமில் பழங்குடி இனமக்கள் தங்கள் சொந்தச் சகோதரர்களைத் தாங்களே கொல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மக்களைப் பயமுறுத்தி புரட்சியாளர்களுக்கும் மக்களுக்குமிடையே உயிரோட்டமான தொடர்பை உடைத்தெறிய வியட்நாமில் அமெரிக்காவால் நடைமுறைப்படுத்தப்பட்ட மூலஉத்தி ரீதியான கிராமத் திட்டத்தை (Strategic Hamlet Policy) நடைமுறைப்படுத்துபவையே இந்த முகாம்கள்.



பஞ்சாப்பில் பல சீக்கியர்களைக் கொன்று குவித்து, அடக்குமுறைகளையும் நடத்திய பொலிஸ் அதிகாரி கே.பீ.எஸ். கில் (படம்) தற்போது சதீஸ்கர் அரசுக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டு உள்ளார். மத்திய அரசின் CRPF, GAF, மற்றும் NSF படைகளின் அடக்குமுறை, கொலைவெறித் தாக்குதல்களும் JCC (கூட்டு ஒருங்கிணைப்புக் குழு), JOC (கூட்டு நடவடிக்கை ஆணை), மற்றும் STF (சிறப்பு அதிரடிப்படை) இவற்றின் ஒருங்கிணைப்புடன் நாகா பட்டாலியன்களின் சூறையாடலும் நாளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாள் அதிகரித்துவருகின்றது. பஸ்தரில் ஒரு அறிவிக்கப்படாத யுத்தம் நடந்து வருகின்றது.

சத்தீஸ்கர் பழங்குடி மாநிலமாகச் சொல்லப் பட்டாலும், பழங்குடிச் சமூகம், பண்பாடு என்பவை திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையின் பேரில் பழங் குடியினருக்குள்ளேயே ஒருவருக்கு ஒருவர் எதிராகப் பிளவுகளை ஏற்படுத்தி சமூகமுமே இராணுவ மயமாக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவின் ஏனைய பகுதிகளிலிருந்து குடியேறும் பழங்குடி அல்லாத உயர்சாதிகளின் அதிகார மையங்கள் சத்தீஸ்கரில் மாவோயிஸ்டு களினால் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றன. அதிகாரத்தையும், ஆட்சியையும் நிலைநிறுத்த அதிகார வர்க்கங்கள் சல்வா ஜுடும் போன்றவற்றை உருவாக்கித் தங்களை நிலைப்படுத்திக்கொள்ள பழங்குடியினரிடையே பிரிவுகளையும் மோதல் களையும் உருவாக்குகின்றனர்.

சத்தீஸ்கர் அரசினால் சிறப்புப் பொதுப் பாதுகாப்புச் சட்டம் 2005 என்ற பெயரில் பொடா சட்டத்தை ஒட்டிய சரத்துடன் இயற்றப்பட்ட கொடூர சட்டத்தில் மனித உரிமை அமைப்புக்களின் பேச்சுரிமையும், கருத்துரிமையும் பறிக்கப்பட்டு உள்ளதுடன், சட்டபூர்வமான அனைத்துச் செயற்பாடுகளையும் தடுப்பதுடன், மக்கள் திரள் அமைப்பகளை அச்சுறுத்துவதாகவும் உள்ளது என மனித உரிமை இயக்கம் (PUCL) குற்றம் சாட்டியுள்ளது.

## சத்தீஸ்கர் மாநிலத்தைக் குறிவைப்பது ஏன்?

அமெரிக்காவின் கட்டளைகளை ஏற்று ஆட்சி நடத்தும் மன்மோகன்சிங், உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல் போன்ற திட்டங்களின் ஒரு வடிவமாக, தனிச்சிறப்புப் பொருளாதார வட்டம் என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியாவின் பல பகுதிகளைத் தாரைவார்த்து உள்ளார். இந்தத் தனிச்சிறப்புப் பொருளாதார வட்டத்தில் இந்தியச் சட்டங்கள் எதுவும் செல்லுபடியாகாது. மேலும் இந்தப் பகுதியில் எந்த வரிகளையும் இந்திய அரசு வசூலிக்க இயலாது.

சுதேசி முகமூடியணிந்த சதீஸ்கர் மாநில பி.ஜே.பி. இராமன்சிங் அரசும், மத்திய அரசின் ஊதுகுழலாக இருப்பதுடன், தனது மாநிலத்தில் தாதுப்பொருட்கள் நிரம்பிய பகுதிகளில் பன்னாட்டு நிறுவனங்களின் ஏஜன்டுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி இயற்கை வளங்களைச் சுரண்ட வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஒரிஸ்ஸா, ஜார்கண்டு, சத்தீஸ்கர் மாநிலங்க ளின் பல மில்லியன் டன் தாதுவளங்களும், விலைமதிப்புமிக்க உயர்வகை மரங்களும்தான் வாஸிங்டன் முதல் டில்லி வரையுள்ள அதிகாரக் கும்பல்களை கொழுக்க வைக்கின்றது. இந்தப் பகுதியில் ஆறுகள் மாசுபடிந்தாலும், சுற்றுச்சூழல் அசுத்தமடைந்தாலும், நூற்றுக்கணக்கான கிராமங்களின் வீடுகள் அழிக்கப்பட்டாலும், இந்தப் பகுதியில் மக்கள் இலட்சக்கணக்கில் இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் இவர்களுக்குக் கவலை இல்லை.

இந்த இயற்கைவளத்தை கையகப்படுத்த இடையூறாயிருக்கும் பழங்குடியான மக்கள்மீது கொடூரமான யுத்தம் தொடுப்பதற்கும், மக்களைக் கொல்வதற்கும் எள்ளளவும் தயங்குவதில்லை.

சத்தீஸ்கர் பல்வேறு வளமான தாதுப்பொருட்கள் உள்ள பகுதியாகும். இப்பகுதிகளில் 75 இலட்சம் டன் பாக்சைட் உள்ளது. மற்றொரு கணக்கெடுப்பின்படி 35,000 மில்லியன் டன் நிலக்கரி, 2,336 மில்லியன் இரும்புத்தாது, 3,580 மில்லியன் சுண்ணாம்பு, 606 மில்லியன் டோலமைட் உள்ளன. சில பகுதிகளில் தங்கப் படிவங்கள்கூட கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிகச்சிறந்த தரமான இரும்புத்தாது தெற்கு சதீஸ்கரில் இருந்தே ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்தியாவிலேயே இங்குதான் இரும்புத்தாது அதிகளவில் உள்ளது.

ஜிண்டால், மிட்டல், டாடா, ரிலையன்ஸ், எஸ்ஸார் மற்றும் நாடு கடந்த நிறுவனங்கள் இந்த இயற்கை வளங்களைச் சுரண்டிக் கொள்ளை இலாபம் அடைய மன்மோகன்சிங்கின் மத்திய அரசும், மாநில பி.ஜே.பி. இராமன்சிங் அரசும் போட்டிபோட்டுக்கொண்டு இந்நிறுவனங்களுக்குப் பக்கபலமாய் உள்ளனர்.

கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் இரும்பு தாதுக்கள் விற்கப் போடப்பட்ட ஒப்பந்தங்களினால் அடுத்த 30 - 40 ஆண்டுகளில் இரும்புத் தாதுவே இந்தியாவில் இல்லாமல் போகும் அளவிற்கு அபாயமுள்ளது.

இந்தப் பெரும்பான்மைத் தாதுப்பொருட்கள் பழங்குடிப் பகுதிகளில், குறிப்பாக மாவோயிஸ்ட் கட்சியின் தாக்கமுள்ள பகுதிகளிலேயே உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த உண்மையை உள்துறை அமைச்சர் பெங்களூர் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது "நக்சலைட்டுகள் நம் தாதுப்பொருட்கள் வளமாக உள்ள மத்திய இந்தியாவின் - குறிப்பாக மலைப் பகுதிகளில் வளர்ந்து வருகின்றார்கள் என்பதே மத்திய அரசின் கவலை. நக்சலைட் இயக்கம் பலமாய் உருவெடுப்பது மைய அரசிற்கு கவலையாயுள்ளது" என்று கூறியுள்ளார்.

பழங்குடிகள் இந்திய அரசின் சுரண்டலை எதிர்த்து நிலம், இயற்கை வளங்கள் மற்றும் காட்டின் மீதான உரிமையை நிலைநிறுத்தி மாவோயிஸ்ட் கட்சியின் பக்கம் உறுதியாய் நின்று போராடி வருகின்றனர்.

சல்வாஜுடும்களின் அடக்குமுறைக்கு எதிரான மாவோயிஸ்டுகளின் எதிர்த்தாக்குதல்களினால் நிலை குலைந்துபோயுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஏப்ரல் 13ம் தேதி டில்லியில் நடத்தப்பட்ட முதல்மந்திரிகள் மாநாட்டில் பேசும்போது "நாடு சந்தித்துள்ள உள்நாட்டு பாதுகாப்பிற்குச் சவால்விடும் மிகப்பெரும் பிரச்சினை நக்சலிசம் ஆகும். இவர்கள் முக்கிய பகுதிகளில் விடுதலை பெற்ற பிரதேசங்களை நிறுவி அங்கு சுதந்திரமான நிர்வாகம், காவல் கண்காணிப்பு மற்றும் நீதியை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்" என்று குறிப்பிட்டு உள்ளதுடன், இவர்களை ஒடுக்குவதற்கு நவீன ஹெலிகாப்டர்கள், இராணுவ உதவிகள் ISRO மூலம் எடுக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் Inter State Intelligence Support Team – ISIST போன்றவற்றுடன் மாநில அரசு, மத்திய அரசுடன் இணைந்து தாக்குதலை நடத்த உத்தரவிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

கடந்த மே மாதம் சதீஸ்கர் மாநில முதல்வரைச் சந்தித்த அமெரிக்க அதிகாரிகள் மாவோயிஸ்டுகளை ஒடுக்க அமெரிக்கா உதவத் தயாராக உள்ளது என்று கூறியுள்ளார். மாநில அரசும், உதவியைப் பெற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளது. (தினமணி 27.5.2006).

சதீஸ்கருக்கு உள்ளும் வெளியிலும், சல்வாஜுடுமை எதிர்த்துப் பலர் குரலெழுப்பி வருகின்றனர். பேராசிரியர் நளினி சுந்தர், டில்லி School of Economics சமூகவியல் பேராசிரியர், ஜப்பானில் ஊடக பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பு மற்றும் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் வால்டர் ஹியர், ஆஸ்திரேலிய தேசிய



பெப்ரவரி 28ல் பயணம் செய்த சல்வாஜுடும் உறுப்பினர்களின் வாகனம் மாவோயிஸ்ட்டுக்களின் நிலக்கண்ணியில் சிக்கியதில் 25 பேர் உயிரிழந்தனர்.

பல்கலைக்கழகத்தின் கல்வெட்டுத்துறையின் பேராசிரியர் கிறிஸ் கிரகரி, ஓவியர் தவ்ஜட் அட்லக், மதுகாரின், பாரிஸ் பல்கலைக்கழகத்தின் நிகலொஸ் பிரவட், நான்ஸ் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானி சாமுவேல் ப்ரதேட் ஆகியோர் சல்வாஜுடும் நடவடிக்கைகளைக் கண்டித்து கையெழுத்து இயக்கம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்தியாவின் 16 மாநிலங்களின் 172 மாவட்டங்களில் மாவொயிஸ்டுகளின் தாக்கம் உள்ளது. இது ஒட்டுமொத்த இந்தியப் பரப்பளவில் 48 சதவிதமாகும். - தெ கல்கா (13.5.2006)

ஒட்டுமொத்த இந்திய மக்கள்தொகையில் 35 சதவிதத்தினர்மீது மாவோயிஸ்டுகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். 12 மாநிலங்களில் 509 காவல் நிலையப்பகுதிகளில் மாவோயிஸ்டுகளின் செல்வாக்கு பரவியளளது. - த இந்து (15.4.2006)

காஷ்மீரிலும் மணர்பூரிலும், நாகாலாந்திலும் இராணுவத்தையே தீர்வாக்க இந்திய அரசு முயற்சித்தது. ஆனால் அது வெற்றிபெறவில்லை. தற்போது தன் சொந்த மக்களின்மீது இராணுவத்தை ஏவத் தயாராகிக்கொண்டிருக்கிறது. காட்மண்டுவைப்போல, டில்லியும் கூட ஒரு நாள் முற்றுகையிடப்படலாம். யாருக்குத் தெரியும்? கண்டிப்பாக இந்தத் திசையை நோக்கித்தான் சூழல் நகர்ந்துகொண்டிருக்கின்றது. - அருந்ததிராய் (தெகல்கா, 6.5.2006)

### உசாத்துணை:

1. சல்வாஜுடும் சத்தீஸ்கரில் பழங்குடி மக்களை வேட்டையாடும் அரசு அடக்குமுறை இயக்கம்

2. War against Naxals in Chatishgarh: will Brahmanical Alternative work? – V.B.Rawant

3. Press release by Independent Citizens Initiative, New Delhi, 29th May 2006. ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சென்ற இதழ் தொடர்ச்சி

# சந்திப்பு: ஜேவிபி சோமவன்ச அமரசிங்க

*தேசம்: நீங்கள் அரசாங்கத்தை ஆதரிக்கிறீர்கள். இக்காலகட்டத்தில் படுகொலைச் சம்பவங்கள் வடகிழக்கில் இடம்பெற்றுள்ளது. இவை இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனுராதபுரத்தில் இடம்பெற்ற சம்பவமும் மிகத் துக்ககரமானது. நீங்கள் அனுராதபுரச் சம்பவத்தை பாராளுமன்றத்திற்கு எடுத்துச் சென்றீர்கள். ஆனால் வட கிழக்குச் சம்பவங்களை கைவிட்டு விட்டீர்கள் ?*

சோ. அ: ஆம் அதில் ஒரு பொறுப்பு இருக்கிறது. படுகொலை தொடர்பாக நாம் என்ன செய்ய நினைத்தோம் என்றால்....

*தேசம்: இது தொடர்பாக யார் மீதும் குற்றம் பதிவு செய்யப்படவில்லை.*

சோ. அ: 1983க்குப் பின் பிரபாகரன் சிங்கள மக்களைத் தூண்டிவிட பல தடவை முயற்சித்தார். அப்படி நடந்திருந்தால் அது மிக மிக வேதனையானதாக இருந்திருக்கும். மகாபோதியை தலதா மாளிகையைத் தாக்கி பல புத்த பிக்குகளைக் கொலை செய்தது சிங்கள மக்களைத் தூண்டி விடவே.

பாராளுமன்றத்தில் நாங்கள் என்ன செய்தோம் என்றால் சிலர் தூண்டப்படுவதை நிறுத்தினோம். இப்படி ஏதாவது நடந்தால் அப்பாவித் தமிழர்களைத் தாக்கும் ஒரு பதட்டம் இருக்கும். மீண்டும் ஒரு 83யை நிறுத்துவதற்காகவே நாங்கள் அனுராதபுரச் சம்பவத்தை கண்டித்தோம். இரு வேறு சம்பவங்களையும் ஒன்றாகப் பார்க்கவில்லை. எங்கள் நோக்கம் அதனிலும் பெரியது. சிங்கள மக்கள் மத்தியில் சில்லறைத் தனமான விளம்பரத்தை பெறுவது எமது நோக்கமல்ல.

தீவின் ஏனைய பாகங்களில் வாழும் தமிழர்களைப் பாதுகாப்பது, அவர்கள் எந்த ஒரு அரசாங்கத்தினதும் சொத்துக்கள். தமிழர்கள் தாக்கப்பட்டு அவர்கள் நாட்டை விட்டு வெளியேறினாலோ அல்லது புலிகளுடன் இணைந்தாலோ அது மிக மிக வேதனையானது.

உங்களுக்குத் தெரியுமா 1983க்குப் பின் ஏன் தென்பகுதியில் ஒரு இனக்கலவரமும் வரவில்லை என்று. யாரும் எதையும் செய்யாததால் கலவரம் வரவில்லை என்று சாதாரணமாகச் சொல்லிவிட முடியாது. நாங்கள் பாரிய வேலைகளைச் செய்து வருகிறோம். புலிகளின் விருப்பத்திற்கு ஏற்ப இன்னொரு கலவரம் ஏற்படாமல் தடுக்கிறோம்.

*தேசம்: இலங்கையில் அனைத்து சமூகங்களுக்கும் பொதுவான ஒரு அடையாளமில்லை. இந்நிலையில் நீங்கள் எப்படி அனைத்து சமூகங்களி னதும் மனங் களையும் இதயங்களையும் வெல்லப் போகிறீர்கள் ?*

சோ. அ: இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கும் பஞ்சாப், திரிபுரா, நாகலாந், மீசோராம் போன்ற இடங்களில் பிரிவினைவாதம் உண்டு. இது இந்திய அரசியலமைப்பின் தோல்வியே. நாங்கள் வெற்றிகர மான அரசியலமைப்பு என்று கருதுவதிலும் தோல்விகளுண்டு. அதனை கற்க வேண்டும். நாங்கள் இந்திய அரசியலமைப்பை லட்சி யமாகப் பார்க்கும் போதும் அதில் உள்ள பிரச்சினைகளைப் பார்க்க மறக்கக் கூடாது.

நீண்ட இந்திய சுதந்திரப் போராட்டம், மதங்கள் மொழி களைக் கடந்து மக்களை இணைத்தது. ஒரே கட்சியின் கீழ் மக்கள் போராடினார்கள்.

சுதந்திரப் போராட்டமில்லை என்றால் நாங்கள் ஐக்கியப்பட்ட தேசியங்கள் இல்லை. அங்கு ஐக்கியதேசியக்கட்சி இருந்தாலும் அதில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் இருந்தனர். அது ஐக்கியப்பட்ட தேசியக் கட்சி அல்ல. அது பிளவுபட்ட கட்சி. தேசியங்களுக்கு எதிரான கட்சி. பெரும்பாலானவர்கள் தேசியங்க ளுக்கு எதிராகச் செயற்பட்டனர். இனவாதிகள். அதில் சில சிங்கள, தமிழ், முஸ்லீம் தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னும் சுதந்திரத்தின் போதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்குப் பின்னும் குழுவாதிகளாக இருந்தனர். சுதந்திரத்தின் பின் தீவிர குழுவாதம் இருந்தது. உண்மையில் மறுதலையாக இருந்திருக்க வேண்டும். இதனால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம்.

*தேசம்: ஒரு தேசிய அடையாளத்தை உருவாக்குவதில் உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன ?*

சோ. அ: மக்களை எப்படி தாங்கள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் என்பதை மறக்கச் செய்வது. அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் எல்லா விடயங்களிலும் சமத்துவத்தை கண்டு மகிழ வேண்டும். எப்போது ஒவ்வொரு பிரஜையும் ஆம் தமது அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டதை உணர்கிறார்களோ அப்போது அவர்கள் தமது குழுவாதத்தை மறப்பார்கள். இதுவே ஒரே வழி.

*தேசம்: சோசலிச சீனாவும் அயலில் உள்ள இந்தியாவும் திறந்த பொருளாதாரக் கொள்கையை நோக்கிச் செல்லும் போது கடன்பழுவில் உள்ள சிறிய இலங்கை உங்கள் பொருளாதாரக் கொள்கையில் வாழ முடியுமா ?*

சோ. அ: எங்கள் பொருளாதாரக் கொள்கை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் ஜனதா விமுத்தி பெரமுன மாறிக் கொண்டு வருவதாகக் கூறினீர்கள். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். ஆம் நாங்கள் முன்னேற்றத்துக்காக மாறிக் கொண்டிருக்கிறோம்.

சோசலிசக் கட்சி மாற்றமடையா விட்டால் அது வேலையற்றதாகப் போய்விடும். மார்க்ஸ் என்ன கருதினார் என்றால் 'மாற்றத்தை அவதானியுங்கள், அதற்கேற்ப நடவடிக்கைகளை மாற்றுங்கள். போக்கை மாற்றுங்கள். கட்சியை மாற்றி அமையுங்கள்.' அபிவிருத்தியடைந்த பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே புரட்சி வெடிக்கும் என்று மார்க்ஸ் கருதினார். ஆனால் என்ன நடந்தது. அது உண்மையாகவில்லையே. மார்க்ஸ் என்ன சொன்னாரோ அது இப்போது பொருத்தமானது அல்ல என்று சொல்வதற்கு ஒருவருமில்லை. ஏனென்றால் விடயங்கள் மாற்றமடைந்துள்ளது.

லெனினுக்கு அதனைச் சொல்லும் முதுகெலும்பு, தைரியம் இருந்தது. ஏன் ? அவர் தனது காலத்தில் நடந்த மாற்றங்களை அவதானித்தார். மார்க்ஸ் இறந்த பின். முன்னைய முதலாளித்துவம் அதன் அதிஉயர் நிலைக்கு ஏகாதிபத்தியமாக மாற்றமடைந்த காலத்தில் மார்க்ஸ் வாழவில்லை. லெனின் அப்போது இருந்தார். அவர் மாற்றங்களைப் பார்த்தார். ஆராய்ந்தார். புதிய நிலைமைகளுக்கேற்ப மார்க்ஸிசத்தை திரும்ப எழுதினார். நடைமுறைப்படுத்தினார். அதனால் தான் அவர் பின்தங்கிய ரஸ்யா புரட்சியைச் செய்யும் எனக் கூறினார். அது நிஜமாகியது.

இந்தியாவிலும் கூட புரட்சி சாத்தியமானது. ஏனென்றால் உலகில் மாற்றங்கள் இடம்பெற்று உள்ளது. உலகம் முதலாளித்துவ முறையால் ஆழப்படுகிறது. அது முதலாளித்துவத்தின் அதிஉயர் நிலையான ஏகாதிபத்திய நிலையை அடைந்துள்ளது. அவர் சொன்னதன்படி ஏகாதி பத்தியத்திற்கு அடுத்த படி சோசலிசம். அவர் அதனை நடைமுறையில் நிரூபித்துள்ளார்.

நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், உலகம் மாறி வருகிறது. ஆனால் சில சோசலிசக் கட்சிகள் நிலைமைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றியமைக்க வில்லை. அதனால் அவை பயனற்றவையாகின்றன. கட்சி என்பது மாற்றத்திற்காக போராடுவதற்கான ஆயுதம். உங்கள் பேனையால் எழுத முடியாது போனால் அதன் பயன்பாடுதான் என்ன? நீங்கள் நிப்பை மாற்ற வேண்டும் அல்லது ஏதோ ஒரு வகையில் அதனை எழுதப் பண்ண வேண்டும்.

*தேசம்: அந்த வகையில் அரசாங்கத்தின் கொள்கை என்ன ?*

சோ. அ: நாங்கள் சொல்வது இதுதான். நாங்கள் பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமாக நிற்கிறோம். சிலர் நாங்கள் பொதுத்துறைக்கு மட்டும் என்று குறிப்பிடுவது உண்மையல்ல. இரண்டுக்குமிடையே போட்டி இருக்க வேண்டும். இரண்டுமே வினைத்திறனுடன் இயங்க வேண்டும். ஊழல் இருக்கக் கூடாது. இப்போது தனியார் துறையில் மிகுந்த ஊழல் காணப்படுகிறது. இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இன்றுவரை எந்த வர்த்தக நபரும் சிறையிடப்படவில்லை. பொதுத் துறையிலும் ஊழல் உள்ளது. எல்லா இடத்திலும் ஊழல் உள்ளது. இவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

*தேசம்: நீங்கள் திறந்த சந்தை பொருளாதாரக் கொள்கைக்கும் உலகமயமாதலுக்கும் எதிரானவர்கள் இல்லையா ?*

சோ. அ: இல்லை. இல்லை. நாங்கள் இதனை திறந்த சந்தைப் பொருளாதாரம் என்று சொல்லவில்லை. இது திறந்த பொருளாதாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லை. இங்கு உள்ள சந்தை போட்டிகளுக்கு திறந்து விடப்பட வில்லை. தனி நிறுவனங்களாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. காஸ், பெற்றோலியம் மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய அம்சங்கள் எல்லாம் தனி ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. அந்த முதலாளித்துவ அமைப்பில் சந்தை போட்டிக்கு திறந்துவிடப்படவில்லை.

*தேசம்: நீங்கள் திறந்த பொருளாதாரத்தை, போட்டிக்கு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தை விரும்புகிறீர்களா ?*

சோ. அ: இல்லை. எங்களுக்கு வேண்டியது மக்களுக்கு பயன்தரக் கூடிய பொருளாதாரம். மக்கள் சுரண்டப்படக் கூடாது. அப்படி ஒரு பொருளாதாரம் இருக்கிறது. அதைத்தான் சீனா நடைமுறைப்படுத்தி வருகிறது. நாங்கள் இது பற்றி சீனாவின் கொம்யூனிஸ்ட் கட்சியுடன் நிறைய பேசியுள்ளோம். அப்படியானால் எப்படி சீனாவில் வறுமையுள்ளது என்று கேட்டோம். வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களில் ஈடுபட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்கள். செல்வச் செழிப்பான பகுதிகளில் இருந்து வறிய பகுதிகளுக்கு வளங்களை மாற்றுகிறார்கள்.

இலங்கையில் பொதுத் துறையையும் தனியார் துறையையும் பொறுப்புள்ளதாக்கி ஊழலற்றதாக்கி பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும். நாங்கள் இதைச் செய்துள்ளோம். 2001ல் இலங்கையில் உயர்ந்த அறுவடை கிடைத்தது. அப்போது எங்களிடம் அந்த அமைச்சு இருந்தது. சிறு தொழிற்சாலைகளை வளர்ப்பதில் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம்.

பொருளாதாரம் மக்களுக்கானது. மக்கள் பொருளாதாரத்திற்கு தீனி போட முடியாது. பொருளாதாரம் மக்களுக்கு உணவூட்ட வேண்டும். அரசியல் கட்சி மக்களுக்கு சேவை செய்வதற்கு. கொள்கைகள் மக்களுக்கு சேவை செய்வதற்கே. கொள்கை சேவை செய்யக் கூடியதாக சரியாக இல்லாவிட்டால், உறுதியாக இல்லாவிட்டால், வினைத்திறனுடையதாக இல்லாவிட்டால் கொள்கை மாற்றப்பட வேண்டும். இது தான் கடந்த சில ஆண்டுகளாக ஜேவிபி க்குள் இடம்பெறுகிறது. ☑








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வி.புலிகளின் வெளி அமைப்புகளில் ஒன்றான மாணவர் சங்கம் யாழ் மாணவர்களை பாடசாலைகளைப் பகிஸ்கரிக்குமாறு யாழ் உதயன் பத்திரிகையின் தலைப்புச் செய்தியினுடாக அழைப்பு விடுத்திருந்தது. இது தொடர்பாக யாழ் றோமன் கத்தோலிக்க ஆண்டகை (R C Bishop Of Jaffna) தோமஸ் சவுந்தரநாயகம் ஒக்ரோபரில் வெளியட்ட அறிக்கையின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது.**

# ஒரு பாதையை திறப்பதற்கு எங்கள் பிள்ளைகளின் கல்வியை பேரம் பேச வேண்டாம்!!!

தொடர்ச்சியான இந்த இன யுத்தத்தால் நாங்கள் எங்கள் நிலத்தை, எங்கள் வீட்டை, எங்கள் பெற்றோரை, எங்கள் இளையோரை, எங்கள் சொத்துக்களை, எங்கள் வருமானத்தை, எங்கள் அறிவாளர்களை இழந்தோம். தினமும் அரசின் நிவாரணத்தில் ஒரு குவளம் உணவுக்காக எம் தன்மானத்தையும் இழந்தோம்.

நாங்கள் சிந்திப்பதற்கும் அதனை வெளிப் படுத்துவதற்குமான சுதந்திரத்தை இழந்தோம். இப்பெரும் இழப்புகளுக்கும் மேல் பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சுதந்திரத்தை கொண்டிருந்தனர். இடம்பெயர்வு, கடுமையான பொருளாதாரக் கஸ்டம், ஆகாய குண்டுகளால் பிள்ளைகளின் உயிருக்கு ஆபத்து, தேடுதல் நடவடிக்கை, என பெற்றோர்கள் ஒரு நேரத்தில் கடுமையாக போராடினார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் எப்போதும் பெரு மதிப்புள்ள கல்வியை தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கத் தவறவில்லை. எல்லா முன்னேற்றத் திற்கும் கல்வியே நுழைவாயில் என்பதை சரியாகவே உணர்ந்திருந்தனர். அரசியல் மற்றும் நலன்களைப் பெற அவர்கள் ஒரு போதும் தங்கள் பிள்ளைகளுடைய கல்வியையோ எதிர் காலத்தையோ விட்டுக்கொடுத்ததில்லை. ஒரு பாதைக்காகவோ தற்காலிக தேவை கருதியோ எங்களது பிள்ளைகளின் கல்வியை பேரம்பேச வேண்டாம்.

தற்போதைய சூழ்நிலை எவ்வளவு மோச மானதாக இருந்தாலும் கல்வியை வளர்க்கவும் பாதுகாக்கவும் நேர்மையாக நின்ற மாணவர் களின் ஒரு பகுதியினர் இப்போது யாழ் மாணவர்களின் கல்விக்கு எதிராக அனைத்து ...ளையும் பாடசாலைக்கும் தனியார் ...லயங்களுக்கும் கூட போக வேண்டாம் ...ட்டுக் கொண்டுள்ளார்கள்.

உண்மை என்னவென்றால் வடக்கில் இந்த இன முரண்பாட்டினால் முதல் பலியானது கல்வித் தரம் தான் என வடக்கில் உள்ள கல்வியியலாளர்கள் வருந்துகின்றனர். பாட சாலைகளைப் பகிஸ்கரிப்பதற்கு அழைப்பு விடுவதற்கான காரணம் முழு அளவில் வெளியிடப்பட்டு உள்ளது, அது எல்லோருக்கும் முழு அளவில் தெரிவிக்கப்பட்டும் உள்ளது. இந்த பகிஸ்கரிப்பை தொடர்வதாலும் மாணவர்களுக்கு கல்வியைத் தடுப்பதாலும் எந்தப்பயனும் ஏற்படவில்லை. வருடாந்த ஜி சி ஈ பரீட்சைகளுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளது. கல்வியைத் தொடர பொருத்தமான சூழல் தேவை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதற்கு யுத்த செயற்பாடுகள் அனைத்தும் ஒரேயடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மாணவர்களை பாடசாலைகளுக்கு போக வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட மாணவர் சங்கம் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும் பாடசாலைகளை இயங்க அனுமதிக்க வேண்டும் என்றும் உறுதியாக வேண்டுகோள் விடுக்கிறோம். அரசாங்கம் ஊரடங்கு உத்தரவை தளர்த்த வேண்டும் என்று அல்லது முற்றாக நீக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

அரசாங்க அதிபர் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கூடுதல் எரிபொருளை வழங்கி அவசியமான பாடசாலை பேருந்துச் சேவையை நடத்துமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். நாங்கள் எல்ரோருமாக யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் இயங்குவதற்கான சூழலை ஏற்படுத்த முயற்சிப்போம்.

R C Bishop Of Jaffna

www.tamilarangam.net


IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality**

**Employment**

**Landlord & Tenant**

**Housing**

**Welfare Benefits**

**Matrimonial**

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



இந்த இலங்கையர் எங்களுடன் கதைத்தார். நாங்கள் அவர் கொழும்புக்கு திரும்பிச் செல்லவும் மீன் வியாபாரத்தை ஆரம்பிக்கவும் உதவி செய்தோம். பின் சுனாமி வந்து அவருடைய வியாபாரத்தை அழித்தது. எங்கள் மேலதிக நிதி உதவியுடன் அவர் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பித்து தற்போது வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.


IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
Tel: 020 7233 0001
Fax: 020 7233 3001
**www.iomlondon.org**


# நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா? எங்களுடன்பேசுங்கள். எங்களால் உங்களுக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்கும்.

நீங்கள் ஐக்கிய ராஜ்ஜியத்தில் தஞ்சம் கோரியவராக இருந்து உங்கள் நாட்டுக்கே திரும்பிச் செல்வது பற்றி எண்ணினால் எங்களால் அதற்கு உதவி செய்ய முடியும்.

- நாங்கள் உங்கள் பயணத்துக்கான விமானச் சீட்டை பெற்றுத் தருவோம்.
- நாங்கள் ஐக்கிய ராஜ்ஜியத்திலும் தாயகத்திலும் ஏற்படும் போக்குவரத்து செலவையும் வழங்குவோம்.
- நாங்கள் உங்கள் பயண ஆவணம் தொடர்பாகவும் ஆலோசனை வழங்குவோம்.
- நாங்கள் பயணம் அனுப்புவதிலும் வரவேற்பதிலும் உங்களுக்கு விமான நிலையத்தில் உதவுவோம்.
- நாங்கள் உங்கள் பயணத்திற்கு தேவையான மருத்துவ உதவிகளையும் வழங்குவோம்.

உங்கள் நாட்டுக்கு சுயவிருப்பில் திரும்பிச்செல்வதற்கு

## 31 ஒக்ரோபர் 2006

இற்கு முன்விண்ணப்பித்தால்நீங்கள்மொத்தமாக குடும்ப உறுப்பினருக்கு

## 3000 பவுண்

உதவியை பெறத்தகுதி உடையவர்கள் ஆவீர்கள்.

(குறிப்பு: 31 டிசம்பர்2005க்கு பின் அரசியல் தஞ்சத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கு 1000 பவுண் வழங்கப்படும்.)

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் உடன் இலவச தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும் 0800 783 2332

This programme is co-financed


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்